Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 310 | வியாழக்கிழமை | புரட்டாதி 21 ஆம் நாள் 07 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## சாவு 43! தொற்று 776

கொழும்பு, ஒக். 7
இலங்கையில் மேலும் 43 பேர் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்

15 ➤

# கைதிகளுக்கு ஏதும் நடந்தால் அரசாங்கம் பொறுப்புக்கூறும்!



### சபையில் நீதிஅமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 7
"தமிழ் அரசியல் கைதிகள் அரச பாதுகாப்பில் உள்ளனர், அவர்களுக்கு ஏதேனும் நடந்தால் அரசாக நாமே பொறுப்புக்கூற வேண்டும்" என்று நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார். "அநுராதபுரம் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை யாழ்ப்பாணம் சிறைக்கு மாற்ற வேண்டும் என்று முன்வைத்த கோரிக்கை தொடர்பில் பாதுகாப்பு தரப்புடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அவர் கூறினார்.

15 ➤

## கீரிமலைக் கடலில் நீராடிய இளைஞன் நீரில் மூழ்கிச் சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 7
அந்தியேட்டிக் கிரியைக்காக கீரிமலைக்குச் சென்ற இளைஞன் உறவினர்களுடன் கடலில் நீராடியவேளை அலை

15 ➤

## கூட்டமைப்பினரையும் விசாரிக்க வேண்டுமாம்

### கூறுகின்றது ஈ.பி.டி.பி.

கொழும்பு, ஒக். 7
"இலங்கை இராணுவத்தினரையும், விடுதலைப் புலிகளையும் மட்டுமன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் குற்ற

15 ➤

## குருநகர் மீனவர்கள் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 7
இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, யாழ்ப்பாணம் குருநகர் மீனவர்கள் நேற்று தொழிலுக்குச் செல்வதை தவிர்த்து தமது எதிர்ப்பை வெளிப்ப

15 ➤

## கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தை ஆரம்பித்துவைத்தார் பிரதமர் மஹிந்த

யாழ்ப்பாணம், ஒக். 7
நயினாதீவில் கடல்நீரை நன்னீராக்கும் இயந்திரம் மூலமான பணியை உத்தியோகபூர்வமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று ஆரம்பித்து வைத்தார்.
மெய்நிகர் தொழில்நுட்பத்தின் ஊடாக குறித்த திட்டத்தை அவர் ஆரம்பித்துவைத்தார்.
யாழ்ப்பாண மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் வழங்கும் வேலைத்

15 ➤



### முச்சந்தி முரளி



"உவையள் பொறுப்புச் சொல்லுற லட்சணம்தான் இந்த உலகத்துக்கே நல்லாத் தெரியும் பாருங்கோ"

### தாக்குதலாளிகள் தப்பியமை பற்றி

## இரு பொலிஸ் அதிகாரிகளிடம் விளக்கம்கோரியது ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஒக். 7
"ஏழாலை பிரதேசத்தில் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை பொலிஸார் வேண்டுமென்றே தப்பிக்கவிட்டனர்" என்ற முறைப்பாடு தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகிய இருவரிடமும் விளக்கம் கோரப்பட்டுள்ளது.
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்

15 ➤

### கோவில்மோட்டை காணி விடயத்தில் வடக்கு அதிகாரிகள் அசமந்தம்;

## ஜனாதிபதி செயலகம் முன்பாக மன்னார் விவசாயிகள் போராட்டம்

கொழும்பு, ஒக். 7
மன்னார், கோவில்மோட்டை பகுதி விவசாயிகள், தமது காணிப் பிரச்சினைக்கு உரியதீர்வு வழங்குமாறு கோரி கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்

15 ➤



## கூட்டமைப்புக் கூட்டத்தில் சிறீ - ஜனா வாய்ச்சமர்!

யாழ்ப்பாணம், ஒக். 7
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரத்துக்கும் (ஜனா) இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.
நாடாளுமன்றக்குழு நாடாளுமன்றத்தில் நேற்றுக் கூடியது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்பட அனைத்து நாடாளு

15 ➤

## 'பண்டோரா பேப்பர்ஸ்' பற்றி சர்வதேச விசாரணை தேவை

### வலியுறுத்துகின்றார் சஜித்



கொழும்பு, ஒக். 7
'பண்டோரா பேப்பர்ஸ்' ஆவணத்தில் இலங்கையர்கள் தொடர்பான தகவல்களும் வெளியாகியுள்ள நிலையில், இது தொடர்பில் வெளிப்படையான, பக்கச்சார்பற்ற விசாரணைகள் சர்வதேச ரீதியில் அங்கீகாரம்பெற்ற 'இன்ரபோல்' போன்ற நிறுவனங்கள்

11 ➤

## 13ஐ முற்றாக நடைமுறைப்படுத்த மாகாணசபைத் தேர்தலை நடத்துக

### கோத்தாபயவிடம் ஸ்ரீலங்கா வலியுறுத்து

11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்தியாவுடனான ஒப்பந்தங்களை ஒருதலைப்பட்சமாக மீறும் இலங்கை

கொழும்பு, ஒக்.7

**சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆகியவற்றின் அடிப்படைகள் மீறப்படுகின்றன - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி இந்தியத் தூதுக்குழுவிடம் எடுத்துக்கூறியுள்ளது.**


தமிழ் முற்போக்குக் கூட்டணித் தூதுக்குழுவினர், இந்திய வெளிவிவகார செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஸ்ரீங்லாவைச் சந்தித்து உரையாடினர்.

இது தொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் சாராம்சத்தின்படி இலங்கையின் ஏனைய பிரஜைகள் அனுபவிக்கும் அதே உரிமைகள், இலங்கைக் குடியுரிமை பெற்ற மலையக தமிழர் பரம்பரையினருக்கும் கிடைக்க வேண்டும்.

ஆனால், பெருந்தோட்டங்களில் வாழும் தமிழ்த் தொழிலாளர் குடும்பங்களுக்கு மாற்றுத் தொழில்களுக்கான காணி உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

13 ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். மாகாணசபை



தேர்தல்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணங்களுடன் மத்திய, மேற்கு, ஊவா, சப்ரகமுவ மாகாண சபை தேர்தல்கள் உடனடியாக நடைபெற வேண்டியது அவசியமானதாகும். 16 ஆம் திருத்தம் முற்று முழுதாக உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திருத்தத்தின் மூலமாகவே தமிழ் மொழியும் ஒரு நிர்வாக மொழியாக, கல்வி மொழியாக, நீதிமன்ற மொழியாக அங்கீகரிக்கப்பட்டது.

13 ஆம் திருத்தம், 16ஆம் திருத்தம் இரண்டுமே இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலமே இலங்கை அரசமைப்பில் அரங்கேறின. ஆகவே இந்திய அரசுக்குக் கடப்பாடு உள்ளது.

இன்று பேசப்பட்டு வரும் தேர்தல் முறை சீர்திருத்தம், இந்த நாட்டில் சிதறி வாழும் எமது மக்களின் நாடாளுமன்ற, மாகாணசபை பிரதிநிதித்துவங்களை இன்னமும் அபாயத்துக்குள் தள்ளும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

1964 ஆம் ஆண்டின் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் 60 வருடங்களுக்குப் பின்னரும் நீடிக்கும் நிலைமைகள் குறித்து இலங்கை அரசிடம் பேசுங்கள்.

இதேபோன்றுதான் 1987 ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தமும் முழுமையாக நடைமுறையில் இல்லை. இந்த விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசுடன் இராஜதந்திர அடிப்படையில் உரிய அழுத்தங்களை வழங்கும்படி இந்திய அரசைக் கோருகிறோம். கூட்டணி தலைவர் மனோ கணேசன் மற்றும் பிரதித் தலைவர்கள் பழனி திகாம்பரம், வி.இராதாகிருஷ்ணன், பொதுச்செயலாளர் சந்திரா சாப்டர் ஆகியோர் உள்ளடங்கலாக, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, துணைத் தூதர் உட்பட தூதரக அதிகாரிகள் சந்திப்பில் கலந்துகொண்டனர். -என்றுள்ளது. (ஒ-4)

---

கிளிநொச்சி ஊடக மையத்தின்

## கொரோனா ஒழிப்புத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் நிறைவு!

கிளிநொச்சி, ஒக். 7

'பாதுகாப்பாக இருங்கள்' எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி ஊடக மையத்தால் ஆரம்பிக்கப்பட்ட கொரோனா ஒழிப்பு வேலைத்திட்டத்தின் முதற் கட்டப் பணிகள் நேற்றுமுன்தினம் நிறைவு செய்யப்பட்டன.

குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் யாசகர்கள் மற்றும் கைவிடப்பட்டு வீதிகளில் உள்ளவர்கள் ஆகியோருக்கு பகல் மற்றும் இரவு உணவுகள் ஊடகவியலாளர்களால் சமைத்து வழங்கப்பட்டன.

அத்துடன் ஆடைகள், முகக் கவசங்கள் மற்றும் தொற்று நீக்கி திரவங்கள் என்பனவும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

குறித்த வேலைத்திட்டத்தின் 30ஆவது நாளான நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களின் நிதிப் பங்களிப்புடன் மதிய உணவும், தென்னிந்தியத் திருச்சபையின் உதவியுடன் ஆடை, நுளம்பு வலை, பாய் மற்றும் துவாய் ஆகியனவும் வழங்கப்பட்டன. (ஐ-6)



## 50 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

முல்லைத்தீவு, ஒக்.7

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மல்லிகைத்தீவு கிராம அலுவலர் பிரிவவைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கனடாவில் உள்ள 'உறங்காவிழிகள்' அமைப்பின் நிதி உதவியுடன் 'கிறீன் பியூசர் நேசன்' பவுண்டேசன் நிறுவனத்தால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-115)

---

## பைஸர் ஏற்றும் திட்டம் மன்னாரில்!

மன்னார், ஒக். 7

மன்னார் மாவட்டத்தில் விசேட தேவையுடைய மற்றும் நீண்ட நாள்களாக சுகவீனமுற்று இருந்த 12 வயது தொடக்கம் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்குப் பைஸர் தடுப்பூசி ஏற்றும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தலைமையில் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத்துறையினர் இராணுவம் மற்றும் விமானப்படை ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்தத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-56)



## வடக்கு- கிழக்கு மாகாணத்தில் 73 வீதமானோருக்கு தடுப்பூசி

கொழும்பு, ஒக். 7

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில், 73 வீதமானோர் இதுவரை கொரோனாத் தடுப்பூசி பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் 72.45 வீதமானோர் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர். அத்துடன் 20 முதல் 29 வயது வரையான பிரிவினரில் 13 வீதத்தினர் இதுவரை இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் 73 வீதமானோர் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர். அத்துடன் 89 வீதமானோர் இதுவரை தடுப்பூசியின் ஒரு டோஸை மட்டும் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

---

சிறப்புத் தேவைக்குட்பட்ட

## சிறுவர்களுக்கு பைஸர் வவுனியாவில் ஆரம்பம்

வவுனியா, ஒக். 7

வவுனியா மாவட்டத்தில் 12 தொடக்கம் 19 வயதுக்கு உட்பட்ட சிறப்புத் தேவையுடைய சிறுவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நாடளாவிய ரீதியில் 12 தொடக்கம் 19 வயதுக்குட்பட்ட சிறப்புத் தேவையுடைய சிறுவர்களுக்கு பைஸர் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் வடமாகாணத்திலும் அண்மையில் பைஸர் தடுப்பூசிகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் 12 தொடக்கம் 19 வயதுக்குட்பட்ட விசேட தேவையுடைய சிறுவர்களுக்கான பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின. முதல்கட்டமாக 66 பேருக்குப் பைஸர் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. (ம-110)

---

தடுப்பூசி அட்டையைக் காட்டாமையால்

## அனில் ஜாசிங்கவை தடுத்த அதிகாரிகள்

கொரோனாத் தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டையை எடுத்துச் செல்லாததன் காரணமாக, சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளரும், சுகாதார சேவைகள் முன்னாள் பணிப்பாளருமான மருத்துவர் அனில் ஜாசிங்க விமான நிலையத்தில் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாடு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலை



யத்துக்குச் சென்ற அவரைத் தடுத்து வைத்திருந்த விமான நிலைய அதிகாரிகள், கையடக்கத் தொலைபேசியின் ஊடாக அட்டையின் நிழற்படத்தை அவர் காண்பித்த பின்னரே வெளிநாடு செல்ல அனுமதித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்தினமான நேற்று வடக்கில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

**அதிபர் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வை வழங்கும்படியும், பிள்ளைகளின் கல்வி உரிமையை உறுதி செய்யுமாறு வேண்டியும் உலக ஆசிரியர் தினமான நேற்று வடமாகாணத்தின் பல இடங்களில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**













**யாழ்ப்பாணம்**

வடமாகாண கல்வியமைச்சுக்கு முன்பாகவும், யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்துக்கு முன்பாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கல்வி நெருக்கடிக்கு தீர்வு வழங்கு, 24 வருட ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு உடனடியாத் தீர்வைத் தா, இலவசக் கல்வியை இராணுவ மயமாக்கும் கொத்தலாவல சட்டமூலத்தை உடனடியாக ரத்துச்செய் ஆகிய மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் நடைபெற்றது. கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு சுகாதார நடைமுறைகளை பின்பற்றி அதிபர்கள், ஆசிரியர்கள் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

**வவுனியா**

வவுனியாவிலும் பலநூறு ஆசிரியர்களும் அதிபர்களும் மேற்படி போராட்டத்தை முன்னெடுத்தனர். வவுனியா வடக்கு வலயம் சார்பாக புதுக்குளம் பகுதியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், வவுனியா தெற்கு வலயத்தின் முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில கலந்துகொண்டவர்கள் இலவசக் கல்விக்கு 6 வீதம் நிதி ஒதுக்கு, இலவசக் கல்வியை தனியார் மயப்படுத்தாதே, தொழில் கௌரவத்தை உதாசீனப்படுத்தாதே, ஐந்தாயிரம் ரூபாய்காக அடிபணிய மாட்டோம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

**மன்னார்**

மன்னார் வலயக்கல்வி பணிமனை முன்பாகவும் அதிபர்கள், ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆசிரியர்களை வீதியில் இறங்கிப் போராட வைக்காதே, மாணவர்களின் இலவச கல்விக்கு உரிமைகொடு போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். '24 வருட காலமாக இழுத்தடிக்கப்பட்ட ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இந்த சம்பள முரண்பாட்டுக்குப் பல்வேறு வகையான வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டு இருந்தபோதும் அவை எதுவும் செயற்பாட்டில் இல்லை. இந்த அறிக்கைகள் எல்லாம் இருட்டு அறையில் கிடப்பில் போடப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் சம்பளத்தை நான்கு பிரிவுகளாக எமக்குத் தராமல், ஒரே தடவையில் எமக்கு வழங்க வேண்டுமென்று கோரி நிற்கின்றோம்' என்று போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

**கிளிநொச்சி**

அதிபர், ஆசிரியர்களின் கவனவீர்ப்புப் போராட்டம் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களம் முன்பாக முன்னெடுக்கப்பட்டது. ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையை நீக்கு, பிள்ளைகளின் கல்வி உரிமையை உறுதிசெய், இலவசக் கல்வியை வியாபாரம் செய்யாதே, கொத்தலாவல சட்டமூலத்தை உடனடியாக ரத்து செய் உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். (ம-20,6,213,110)

# ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு தயார்

## மஹிந்த உறுதியளிப்பு

ஆசிரியர்களின் கௌரவத்தைப் பாதுகாக்க, அவர்களின் சாதாரணமான கோரிக்கைகளுக்கு செவிமடுக்க நாம் தயார். எனவே மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு அவர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில், காணொலி தொழில்நுட்பம் ஊடாக கலந்து கொண்டு வாழ்த்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையை நாம் எப்போதும் பாராட்டுகின்றோம். ஆசிரியர்களால் உலகின் எதிர்காலம் மறுசீரமைக்கப்படுகின்றது.

அரசு என்ற ரீதியில் ஆசிரியர் துறைக்கான வரவேற்பை நாம் மேலும் உறுதிப்படுத்துவோம். நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள பிள்ளைகளுக்கு சிறந்ததை வழங்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அதற்கமைய உலக தரத்துக்கு ஏற்ற வகையில் இலங்கை ஆசிரியர்களைத் தயார்ப்படுத்தும் சவாலை நாம் பொறுப்பேற்றுள்ளோம். அதற்காக கல்வி அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் முன்னெடுக்கும் பணிகளை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். கொரோனாத் தொற்றால் மட்டுப்படுத்தப்பட்ட பிள்ளைகளின் கல்வியை மீள மறுசீரமைக்கும் இதயம் படைத்தவர்கள் ஆசிரியர்களே என்பதை நான் மீண்டும் நினைவூட்டுகின்றேன். என்றார்.

நிகழ்வில் கல்வி அமைச்சின் ஊடாக முதல் முறையாக ஆசிரியர்களுக்கு [illegible] நடவடிக்கையும் இடம்பெற்றது என்று பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (4)




**என்னதான் மேலிடத்தில இருந்து குனியக் குனியக் குட்டு வாங்கினாலும், 'என் கனவு பாழ்' எம்.பி.யின்ர அட்டகாசம் அடங்கிறதாக் காணேல்ல. உந்தாளை கொஞ்சம் தட்டி வைக்கத்தான், மேலிடத்தில இருந்து ஒருத்தரை இறக்கிப் பார்த்தவை. அந்தப் பெடியனும் கொஞ்சம் இறுக்கி ஒடுக்கினாலும் ஆளின்ர ஆட்டம் இப்போதைக்கு ஓயிற மாதிரியில்லை. இதுக்குப் பின்னால 'என் கனவு பாழ்' எம்.பி.யின்ர சித்தப்பா இருக்கிறதா ஒரு தகவல். அந்த மனுசன் கவனிக்க வேண்டிய இடங்களில நல்லா 'ஊத்திக் குடுக்கிற தோட.' 'பெட்டியும்' கைமாறுறதா சொல்லினம்.**

**அந்தாளுக்கு ஏகப்பட்ட 'பிஸ்னஸ்'. எண்டாலும் இப்பிடி அள்ளி இறைச்சு செலவழிக்கிற வழியில எங்கையாவது ஓட்டை இருக்கத்தானே வேணும் என்று தேடிப்பார்த்திச்சு 'பட்சி'. அதில ஒரு விசயம் மாட்டுப்பட்டிருக்கு. இண்டைக்கு அதைச் சொல்லாட்டி பட்சிக்கு பத்தியப்படாது பாருங்கோ.**

**காலாதிகாலமாக எல்லாரும் 'கொமிசன்' அடிக்கிற அதேயிடத்திலதான் சித்தப்பரும் தன்ர வேலையைக் காட்டுறாராம்.**

**வேற ஒரு இடமுமில்லை, இந்த ஒப்பந்தகாரருக்கு அரச ஒப்பந்தங்களை எடுத்துக் கொடுத்தா அதுக்குரிய பங்கு இவருக்குப் போய்ச் சேருதாம்.**

**இப்ப 'கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டம்' எண்டொரு திட்டம் நடைமுறையாகிக் கொண்டிருக்கு. கிராமத்து றோட்டுகள், ஒழுங்கையளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பெடுத்துச் செய்து போட்டு திருப்பிக் குடுக்கிறதுதான் இந்தத் திட்டம். இப்படியான சின்ன றோட்டுகளை அபிவிருத்தி செய்யேக்க பொதுவா அந்த கிராம மட்ட அமைப்புக்களுக்குத்தான் ஒப்பந்தத்தைக் குடுக்கிறது வழமை. இதால அந்த கிராம மட்ட அமைப்புக்கள் தங்களை வளர்த்துக் கொள்ளேலும் எண்டதால தான் அப்பிடிப் பொதுவாக் குடுக்கிறவை.**

**இப்பிடி ஒப்பந்த வேலை செய்யிற கிராம மட்ட அமைப்புக்களின்ர விவரத்தை 'புலிகேசி' கேட்டவராம். புலிகேசி ஆரெண்டு தெரியுமோ? பட்சி கனநாளா வராததால உங்களுக்கு மறந்திருக்கும். மக்கள் சேவையே மகேசன் சேவை எண்டு செய்யிற மாவட்டத்தின்ர முதல் ஆள் தான் அந்தப் புலிகேசியார். அவர் டி.எஸ். மாரிட்ட விவரத்தைக் கேக்க அவையும் கச்சேரிக்கு விழுந்தடிச்சுக் கொண்டு அனுப்பிச்சினம்.**


**ரண்டு நாளால, என் கனவு பாழ் எம்.பி.யின்ர எடுபிடிகள், வால்பிடிகள், ஆலவட்டங்கள் எண்டு கொஞ்சப் பேர் அந்த கிராம மட்ட அமைப்புக்களிட்ட போனவையாம். நாங்கள் 'பாழாப்போன கனவு ' எம்.பி.யின்ர ஆக்கள். உங்களுக்கு கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்துக்குரிய ஒப்பந்தம் வரும். ஆனா அதைச் செயற்படுத்திறதுக்குரிய ஒப்பந்தகாரரை நாங்கள்தான் தருவம் எண்டு கட்டன் ரைட்டா சொல்லியிருக்கினமாம்.**

**உங்களுக்கு ஒரு சின்னக் கொமிசன் தரலாம் எண்டும் ஒரு தூண்டிலைப் போட்டிருக்கினமாம்.**

**இப்பிடி ஒப்பந்தகாரரை அவைதான் போடுவினம் எண்டா நேர அவையிட்டையே குடுத்திட்டு போகலாமே? பேந்து ஏன் கிராம மட்ட அமைப்புக்களிட்ட குடுக்கிறம் எண்டு அதிகாரிமார் படம் காட்டினம் எண்டு விளங்கேல்ல.**

**'பாழாப்போன கனவு' எம்.பி.க்கும் அவரின்ர சித்தப்பருக்கும் பணம் காய்கிற மரக் கொப்பு வேணும் தானே. அதுக்குதான் இப்பிடி ஒப்பந்தகாரரை தாங்களே நியமிச்சு, அவையிட்ட வாங்கிறதை வாங்கி, பொக்கெற்றை நிரப்பத்தான் இந்தப் பிளானாம்.**

**இதுமட்டுமில்லை. இப்பிடி நிறைய ஐடியாக்களை அவை வைச்சிருக்கினம். அவையின்ர கெட்டகாலமோ என்னவோ, அதுகள் எல்லாம் பட்சிக்கும் நல்லாத் தெரியும். அதால அடிக்கடி அதுகளை பட்சியும் அம்பலப்படுத்திக்கொண்டேயிருக்கும்.**



**- பட்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறையின் ஒதுக்கீடுகளுக்கு ஏற்ற பயன் கிடைக்கவில்லை

*அரச கணக்குக்குழு அறிக்கை*

கொழும்பு, ஒக். 7

**வருடாந்த அரச வருமானத்தில் 10 வீதத்துக்கும் மேல் கல்விக்காக செலவிடப்பட்டாலும் சில பாடசாலை மாணவர்களுக்குத் தரமான கல்வி கிடைப்பதில்லை என்று நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடருக்கான அரசின் கணக்குக் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

பொது மக்களால் அதிகம் பேசப்பட்ட முத்துராஜவல ஈரநிலத்தின் தற்போதைய நிலை மற்றும் யானை மனித மோதல்கள் போன்ற காலத்துக்கு ஏற்ற பிரச்சினைகள் குறித்து காத்திரமான நடவடிக்கை அவசியம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் கணிசமான கடமைகளை மேற்கொள்கின்ற இலங்கை பொலிஸுக்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக வீதி விபத்துக்களில் அரைவாசியைக் குறைக்கக்கூடிய ஆற்றல் அற்றுப்போவது தொடர்பிலும் இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையை ஒரு ஆணைக் குழுவாக மாற்றுவதற்குத் தேவையான அவசியம் உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வருடாந்த அரச வருமானத்தில் 10 வீதத்துக்கும் கல்விக்காக செலவிடப் பட்டாலும் சில பாடசாலை மாணவர்களுக்குத் தரமான கல்வி கிடைப்பதில்லை என்றும் குழு தனது அவதானிப்பை முன்வைத்துள்ளது.

நாட்டின் கல்வித்துறையில் வளங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதில் குறைபாடுகள் காணப்படுவதாகவும், இந்த நிலைமையை நீக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டிய தன் அவசியம் பற்றியும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (ம)




## சர்ச்சையைக் கிளப்பும் பண்டோரா ஆவணம்

கொழும்பு,ஒக்.7

கறுப்பு பணம் மூலம் சொத்துக்களை வாங்கியவர்களின் ஆவணங்களை வெளியிட்டுள்ள பண்டோரா ஆவணம், இலங்கை தொடர்பில் மற்றொரு ஆதாரத்தை வெளியிட்டுள்ளது.

சொத்துக்களைக் குவித்த அரசியல் தலைவர்கள், தொழில் அதிபர்கள், பிரபலங்கள் பட்டியலில், இலங்கையின் முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்சவின் பெயரும் இடம்பிடித்துள்ளது.

இந்தநிலையில் நிருபமாவின் கணவரான திருக்குமார் நடேசன் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 2016 ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தை, தனது ஆதாரங்களின் ஒரு பகுதியாக பகிரங்கப்படுத்தியுள்ளது பண்டோரா. திருக்குமார் நடேசன் அந்தக் காலப்பகுதியில் மல்வான பங்களா தொடர்பில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அவர் விடுதலை செய்யப்படுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் அந்தக் கடிதத்தை எழுதியுள்ளார். குறித்த கடிதத்தையே பண்டோரா ஆவணம் ஆதாரமாக வெளியிட்டுள்ளது. (ஒ-4)

## பஸ் மோதியதில் மூதாட்டி இறப்பு!

கொழும்பு, ஒக். 7

பஸ் மோதியதில் மூதாட்டியொருவர் பரிதாபமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை வீதி, மூதூர் மருத்துவமனைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார். பேருந்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம-22)

## தொழில் கற்கைகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2021 ஆம் ஆண்டுக்கான, 6 மாதங்களான குறுங்கால கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நீர்க் குழாய் பொருத்துதல், மின்னியலாளர், அலுமினியம் பொருத்துநர், மரவேலை தொழில்நுட்பம், தையல், கட்டுமான தொழில்நுட்பம், வெல்டிங் தொழில்நுட்பம், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் திருத்துநர் உள்ளிட்ட பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விவரங்களுக்கு நேரடியாக தொழில்நுட்பக் கல்லூரியுடனோ அல்லது 021 2220028,0212212402 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவே தொடர்பு கொள்ள முடியும்.

இலவசமாகக் கற்பிக்கப்படும் கற்கை நெறியுடன் மாதாந்தம் விசேட கொடுப் பனவுகளாக 4 ஆயிரம் ரூபா உதவித்தொகையும், போக்குவரத்து பருவகாலச் சிட்டையும், வேலைக்களப் பயிற்சிகளும் சலுகைகளாக வழங்கப்படும் என்று கல்லூரிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-4)

## எங்கள் ஆட்சிக்கால விடயங்கள் பண்டோரா ஆவணத்தில் இல்லை

*'உருட்டுகிறார்' பீரிஸ்*



கொழும்பு, ஒக். 7

1990 முதல் 2000ஆம் ஆண்டு வரையான 10 ஆண்டுக்கால பகுதியில் இடம்பெற்ற விடயங்களே பண்டோரா ஆவணத்தில் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி காலப்பகுதிக்குள், ராஜபக்ச ஆட்சி யுகத்துக்கும் இடையில் எந்தவித தொடர்பும் கிடையாது. இருந்தாலும் இந்த விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

பண்டோரா ஆவணம் தொடர்பில் பெரும் பரபரப்பாக பேசப்படுகின்றது. அந்த ஆவணம் தொடர்பில் அவதானம் செலுத்தினால் 1990-2000 வரையான 10 ஆண்டுக் காலப்பகுதியில் திரட்டப்பட்ட நிதி, மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் தொடர்பான விடயங்களே அதில் உள்ளடங்கியுள்ளன.

மேற்படி காலப்பகுதியில் மஹிந்த ராஜபக்ச யுகம் ஆரம்பமாகவில்லை. 2005 ஆம் ஆண்டில்தான் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியானார்.

எனினும், எந்த ஆட்சிக் காலப்பகுதியில் சம்பவம் இடம்பெற்றாலும் அது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும். நாம் அதனை நடத்துவோம்- என்றார். (ஒ-44)

## ஆபாசப் பேச்சுக்கு தடை விரைவில் சட்டவரைவு!

கொழும்பு, ஒக். 7

ஆபாசப் பேச்சுகளை தடைசெய்வதற்கான சட்டவரைவை வர்த்தமானியில் வெளியிடவும், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தின்போது, நீதி அமைச்சரால் முன்வைக்கப்பட்ட மேற்படி யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் வேறு ஊடகங்கள் வாயிலாக உருவாக்கப்படும் ஆபாசப் பேச்சுக்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கான சட்டவரைவை தயாரிப்பதற்காக 2020ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டவரைவுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டவரைவை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காகவுமே ஒப்புதல் கிடைத்துள்ளது. (ஒ-44)

## சிறிய நடுத்தர வர்த்தகர்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

கொழும்பு, ஒக். 7

சிறு மற்றும் நடுத்தர வர்த்தகங்களின் அபிவிருத்திக்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி வழங்கத் தயாராக உள்ளது என்று அதன் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் தெரிவித்தார்.

உள்நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக, ஆசிய அபிவிருத்தி வங்கியால் கடந்த ஆண்டில் 750 மில்லியன் டொலர்களைக் கடன் வழங்கப்பட்டிருந்தது. அந்தத் தொகையை, அடுத்த ஆண்டில் ஒரு பில்லியன் டொலராக அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். சூரியசக்தி மற்றும் காற்றாலை மின்னுற்பத்தி வேலைத்திட்டங்கள், சேதனப் பசளைப் பயன்பாட்டைப் பேணுதல், நாட்டின் வனப்பகுதியை அதிகரித்தல் ஆகிய திட்டங்களுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாளை மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாளை 08 ஆம் திகதி வெள்ளி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி 66ம் பிரிவு இராணுவ முகாம், அரசபுரம் இராணுவ முகாம், பூநகரி பிரதேச செயலகம், 66ம் பிரிவு இராணுவ பயிற்சிப் பள்ளி, 4 வது மைல் கல், பூநகரி, அரசபுரம், ஞானிமடம், கௌதாரிமுனை, காஞ்சிபுரம், கறுக்காய்த்தீவு, கொல்லக்குறிச்சி, தம்பிராய், குஞ்சுப்பரந்தன், முட்கொம்பன், நல்லூர், நேரடம்பன், நெற்புலவு, ஓவசியர் கடை சந்தி, பள்ளிக்குடா, பள்ளிக்குடா சுனாமித் திட்டம், பரமங்கிராய் செம்மண்குன்று சின்னபல்லவராயன்கட்டு, தரணிக் குடியிருப்பு, வாடியடி, வெட்டுக்காடு (கௌதாரி முனை), வீரையடி, விநாசியோடை (கௌதாரிமுனை) ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படவுள்ளது என இலங்கை மின்சார சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'பண்டோரா ஆவணம்' விவகாரத்தை கையிலெடுத்தார் ஜனாதிபதி கோத்தா

### விசாரணைக்கு பணிப்பு: 30 நாள்கள் கெடு



**கொழும்பு, ஒக். 7**

**பண்டோரா ஆவணத்தில் இலங்கை விவகாரம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக உரிய விசாரணை நடத்தி ஒரு மாதத்துக்குள் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால், இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கு நேற்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போதே அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும மேற்படி தகவலை வெளியிட்டார்.

பண்டோரா ஆவணம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு,

'பண்டோரா ஆவணம் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இன்று (நேற்று) முற்பகல் தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. இதன்படி குறித்த ஆவணத்தில் இலங்கை சம்பந்தமாக உள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து ஒரு மாதத்துக்குள் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கு அவர் ஆலோசனை வழங்கினார்.

நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் இவ்விவகாரம் தொடர்பில் ஆராயப்பட்டது. இலங்கை அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு அரசியல் பிரமுகர்களின் பெயரும் இதில் உள்ளக்கடப்படவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். வியாபாரி ஒருவர் மற்றும் அவரின் மனைவி தொடர்பான தகவல்களே வெளியிடப்பட்டுள்ளன. அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, 2013, 2016, 2017 ஆம் ஆண்டுகளிலும் இதே போன்ற அம்பலப்படுத்தல்கள் இடம்பெற்றிருந்தன - என்றார்.

இதேவேளை- பண்டோரா பேப்பர்ஸ் வெளியிட்டுள்ள தகவல்கள் குறித்து உடனடியான விசாரணைகளை நடத்துமாறு பிரபல தொழிலதிபர் திருக்குமார் நடேசன், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் முன்னதாகக் கோரிக்கை விடுத்துள் ளார். இது தொடர்பில் அவர் கடிதமொன்றையும் ஜனாதிபதிக்கு எழுதியுள்ளார். எந்த மோசடி வேலைகளிலும் தாம் ஈடுபடவில்லையென அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம-44)

*காத்தான்குடியைச் சேர்ந்தவர்*

## அச்சுவேலியில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் உள்ள சிகரம் பிளாசா கட்டடத்தொகுதியில் உள்ள அறை ஒன்றில் வாடகைக்கு தங்கியிருந்த 46 வயதுடைய நபரொருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

அச்சுவேலி பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றிவரும் காத்தான்குடியைச் சேர்ந்த ஆதாம் பாவா முஹம்மது ரவுஸ் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தங்கியிருந்த அறை நீண்டநேரமாகப் பூட்டப்பட்டிருந்துள்ளது. அவரை அழைத்தபோதிலும் உள்ளே இருந்து பதில் வராததை அடுத்து கதவை உடைத்துக்கொண்டு சென்று பார்த்தபோது அவர் இறந்திருந்தது தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)

## கொழும்பை வந்தடைந்தது எவர்ஏஸ் கொள்கலன் கப்பல்



கொழும்பு,ஒக்.7

உலகின் மிகப்பெரிய கொள்கலன் கப்பலான எவர்ஏஸ். கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

நெதர்லாந்தின் ரோடர்டேம் துறைமுகத்திலிருந்து, கடந்த மாதம் புறப்பட்ட குறித்த கப்பல் நேற்றுக்காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இது போன்ற பெரிய கொள்கலன் கப்பல்களைக் கையாளக் கூடிய 24 துறைமுகங்கள் உலகில் உள்ளன. எனினும் தெற்காசியாவில் குறித்த கப்பல் நங்கூரமிடக்கூடிய ஒரேயொரு துறைமுகம் கொழும்பு துறைமுகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் 400 மீற்றர் நீளமும், 62 மீற்றர் அகலமும் கொண்டது. 23 ஆயிரத்து 992 கொள்கலன்களைச் சுமக்கும் திறன் கொண்டது (ஒ-4)

## பண்டோரா ஆவணத்தை வைத்து ராஜபக்ச குடும்பம் மீது தாக்குதல்!

### *அமைச்சர் சந்திரசேன ஆதங்கம்*



கொழும்பு, ஒக். 7

பண்டோரா ஆவணம் தொடர்பில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டால் அதுதொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பண்டோரா ஆவணத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடின், இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் உட்பட பலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. நிருபமா ராஜபக்ச, ராஜபக்ச குடும்பத்தை சேர்ந்தவர் என்பதால், பண்டோரா ஆவண விவகாரத்தை ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராக திருப்புவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இதற்கான ஒத்திகைகளும் இடம்பெற்றுள்ளன.

நிருபமா ராஜபக்ச எமது கட்சியை சேர்ந்தவர் அல்லர். அவர் சுதந்திரக்கட்சியின் அமைப்பாளராக இருக்கின்றார். இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு, சி.ஐ.டி. என முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு பல இடங்கள் உள்ளன. அங்கு சென்று முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டால் உரிய விசாரணை இடம்பெறும். சுயாதீன விசாரணைக்கு அரசு வழிசமைத்துக் கொடுக்கும்.

இதற்கு முன்னர் பனாமா ஆவணம் வந்தது. அதில் சம்பிக்கவின் பெயர் இருந்தது. எங்கேயோ உள்ள ஒரு அமைப்பு நடத்திய ஆய்வை அடிப்படையாகக்கொண்டு ராஜபக்ச குடும்பத்தை தாக்க வேண்டாம். - என்றார். (ம-44)

*ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச*

## பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோதே பல பிள்ளைகள் காணாமலாக்கப்பட்டனர்

### பேரப்பிள்ளையை கொஞ்சும் அவர் இதையும் சிந்திக்கவேண்டும் என்கிறார் கஜேந்திரன் எம்.பி

கொழும்பு, ஒக். 7

அமெரிக்காவுக்குச் சென்று அங்கு தனது பேரப்பிள்ளையை கொஞ்சி தூக்கிமகிழ்ந்த ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, பாதுகாப்பு செயலாளராக இருக்கும்போதே போரின் இறுதிக் காலகட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் காணாமலாக்கப்பட்டனர் என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு காணாமலாக்கப்பட்ட, படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி இராணுவத்தினரின் பேச்சை நம்பி அவர்களிடம் சரணடையச் சென்ற பல பிள்ளைகள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும். தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்பு செயலாளராக இருந்தபோதே இவர்கள் காணாமலாக்கப்பட்டனர்.

இதேவேளை அண்மையில் அமெரிக்காவுக்கு சென்றிருந்த ஜனாதிபதி அங்கு தனது பேரப்பிள்ளையை கொஞ்சி தூக்கி மகிழ்ந்ததை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார். காணாமலாக்கப்பட்ட பிள்ளைகளின் தந்தைகள் தற்போதும் கண்ணீரோடு வாழ்ந்து வருவதோடு தமது பிள்ளைகளை தேடி வருகிறார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் - என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர்களுடன் நல்லிணக்கத்துக்கு வருக!

## ஜனாதிபதியை வலியுறுத்துகிறது எதிரணி

கொழும்பு, ஒக். 7

**'தமிழ் மக்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களுடன் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அதற்கு நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்கு வோம். இதற்கான நடவடிக்கையை குழப்பியடிக்கமாட்டோம்'**

என்று எதிரணி பிரதம கொற டாவான நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரி யல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற் றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இலங்கையில் மனித உரி மைகள் மீறப்படுகின்றன. சிவில் உரிமைகள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளன. இத னால்தான் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தோல்வி ஏற்பட்டது. இலங் கையின் கடந்த மூன் றாண்டுகால செயற்பாடு கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் அவ தானிப்புடனேயே இருந் துள்ளனர். அவர்களுடன் கலந்துரையாடும்போது இவ்விடயம் தெரியவந்தது. ஐரோப்பிய ஒன்றிய பிர திநிதிகளுடன் எதிர்க்கட் சித் தலைவர் பேச்சு நடத் தியபோது, என்னதான் பிரச்சினை இருந்தாலும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலு கையை நிறுத்தவேண்டாம் என கோரிக்கை விடுத்தார். நிறைவேற்று அதிகார ஜனா திபதியின்கீழ் அதிகாரங்கள் குவிந்து கிடப்பதாகவும், அவை பகிரப்பட வேண் டும் எனவும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குறிப் பிட்டனர். நாமும் அதைத் தான் சொல்கின்றோம். பயங்கரவாத தடைச்சட்டம் மட்டும் மீளாய்வு செய்யப்ப டக்கூடாது, 20ஆவது திருத் தச்சட்டமும் மீளப் பெறப்பட வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத் துள்ளார். அது சிறந்த விட யம். தமிழ் மக்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களுடன் ஜனாதிபதி இணக்கப்பாட் டுக்கு வந்தால் மகிழ்ச்சி. அதற்கு நாம் முழு ஒத்து ழைப்பும் வழங்குவோம். குழப்பியடிக்கமாட்டோம். மனித உரிமைகள், ஜன நாயக உரிமைகள், ஊடக சுதந்திரம், தொழிற்சங்கங்க ளுக்குள்ள உரிமைகள் என் பன பாதுகாக்கப்பட வேண் டும்- என்றார். (ம-44)



## படையினரால் யாழில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.7

இராணுவ தினத்தை முன்னிட்டு 51 ஆவது காலாட் படைப்பிரிவினரால் யாழ்ப்பாணத் தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன் னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் காரைநகர் வீதியின் இரு மருங்கிலும் கரந்தை மற்றும் மருத மரக் கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

மேலும் சுழிபுரம் பகுதியில் வீட்டுத்தோட்டம் செய்பவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் தென்னை மற் றும் பலா மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் கல்வளை முதியோர் இல்லத் தில் வாழ்கின்ற முதியவர்களுக்கு மதிய உணவு மற்றும் முதியவர்களுக்கான அத்தியாவசியப் பொருள்கள் என்பன வழங்கப்பட்டன.

குறித்த வேலைத்திட்டத்தில் 51 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி, 512 மற்றும் 513 ஆவது காலாட் படைப்பிரி வின் படைத்தளபதிகள், கட்டளை அதிகா ரிகள் மற்றும் இராணுவ வீரர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

## ஆனைவிழுந்தான் வயற்காணிகள் மீள மக்களிடம் கையளிக்கப்படும்

### அதிகாரிகள் நேரில் ஆராய்வு

கிளிநொச்சி,ஒக்.7

கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட் பட்ட ஆனைவிழுந் தான் வயற்காணி களை மக்களுக்கு மீள வழங்கக்கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்பாக, அதிகாரி கள் நேரில் ஆராய்ந் தனர்.

கரைச்சிப் பிரதேச செயலாளர் பால சிங்கம் ஜெயகரன் தலைமையிலான குழுவினர் குறித்த பிரதேசத்தைப் பார் வையிட்டனர்.

குறித்த காணிக ளில் நெற்செய்கை மேற்கொண்டமைக்கு ஆதாரமாக கொங் றீட் கட்டுமானங்க ளான நீர் விநியோக வாய்க்கால்கள் இருந் தமையை குழுவினர் உறுதிப்படுத்தினர்.

1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த பகுதியில் நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் போர் நிலை மைகளால் மக்கள் விவசாய நடவடிக்கை களைக் கைவிட்டுள் ளனர் என்று குழுவி னருக்கு மக்களால் எடுத்துக் கூறப்பட்டது.

இதனையடுத்து குறித்த வயற்காணி களில் மீண்டும் நெற் செய்கை மேற்கொள் வதற்கான சாத்தியங் கள் ஆராயப்படும் என்று வனவளத் திணைக்களப் பணிப் பாளர் மகேஷ் சேன நாயக்கா தெரிவித் தார். இது தொடர்பில் விரிவான அறிக்கை யொன்றை பிரதேச செயலரிடம் கோரி னார். (ஒ-4-6)



## அனுமதியற்ற இடங்களில் எல்லைக் கற்கள் நடுகை

### வீதிப்புனரமைப்புக்கும் தடை

கிளிநொச்சி,ஒக்.7

கல்மடுக்குளத்தில் கீழ் உள்ள பிரதான கால்வாயில் இரு பகுதிகளிலும், காணி களில் எல்லைக ளைத் தாண்டி பலர் எல்லைக்கற்களை நடுகை செய்துள் ளனர். அவற்றை உடன் அகற்றி கால் வாய் புனரமைப்புப் பணிகளுக்கு ஒத் துழைப்பு வழங்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். விவசா யிகளுக்காக ஒதுக் கப்பட்ட காணிக ளில், அவற்றின் எல்லைகளைத் தாண்டி அதிக நிலப் பரப்பை உள்ளடக்கி எல்லைக் கற்கள் நடுகை செய்யப்பட் டுள்ளன. இதனால் வீதிக்கு மிக அரு கில் விவசாயிகள் பலர் பயிர்ச்செய்கை யில் ஈடுபட்டுள்ள னர். கல்மடுக் குளம் தொடக்கம் தரும புரம் வரையான பிரதான வீதி வரை யான பகுதிகளில் இந்த நிலைமை காணப்படுகின்றது. சுமார் 15 வருடத் துக்கு மேல் எந்த வித புனரமைப்பும் இன்றிக் காணப்ப டும் இந்த வீதியூடாக பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட் டுள்ளது. எனவே காணிகளுடன் தொடர்புடைய விவ சாயிகள் தாமாக முன்வந்து அத்து மீறி அமைக்கப் பட்டுள்ள எல்லைக் கற்களை அகற்றி, கால்வாய் புனர மைப்பு மற்றும் வீதிப் புனரமைப்புக்கு ஒத் துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத் துள்ளனர். (ஒ-4-113)

## கொரோனாவிலிருந்து இலங்கைக்கு விடுதலை

கொழும்பு,ஒக்.7

இலங்கையில் அடுத்து வரும் சில மாதங்களில் கொரோனாத் தொற்று முழுமையாக ஒழிக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மக்களை வாழ வைக்கும் பொறுப்பு எப்போதுமே அரசுக்கு உள்ளது. அதற்கு முன்னுரிமை அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தடுப்பூசி மூலம் உலகின் நான்கு பணக்கார நாடுகளைத் தாண்டி ஒரு முன்னணி நாடாக இலங்கை மாறியி ருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## இளம்பெண் உயிர்மாய்ப்பு

இளம் பெண் ஒருவர் தவ றான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் வட்டுக் கோட்டை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சுழிபுரம் பகுதியில் நேற்று அதிகாலை நடந்துள் ளது. சுழிபுரம் காளுவன் பகுதியைச் சேர்ந்த 19 வய துடைய இளம் பெண்ணே இவ்வாறு உயிரை மாய்த் துள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வரு கின்றனர். (ஒ-4-27-125)

## மேய்ச்சல் தரவைக்கு உரிமை கோரும் நபர்

கால்நடைகளின் மேய்ச்சல் தரவையா கக் காணப்பட்ட எட்டு ஏக்கர் காணியை, தனிநபர் ஒருவர் கையகப்படுத்தி, அதனை விற்பனை செய்வதற்கு முயற் சித்து வருகின்றார்.

இதுதொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பளை வேம்பொடுகேணி கிராம அலு வலர் பிரிவில் உள்ள நவுணவெளி என்னும் இடத்தில் உள்ள காணியையே தனியாள் ஒருவர் அபகரிக்க முயற்சிக் கின்றார்.

இந்தத் தரவைக் காணியில் முன்னர் மாட்டு வண்டிச் சவாரி நடத்தப்பட்டு வந்தது. இங்குள்ள விளையாட்டுக் கழகத்தினர் கோடை காலத்தில் விளை யாட்டு மைதானமாகவும், ஆலய உற்சவ காலங்களில் நிகழ்வுகளை நடத்துவதற் கும் இந்தத் தரவையையே பயன்படுத்தி வந்தனர். இந்தக் காணிக்கு இதுவரை காலமும் எவரும் உரிமை கோராத நிலையில், தற்போது இத்தாவில் பகுதி யைச் சேர்ந்த ஒருவர் காணிக்கு உரிமை கோரியுள்ளார்.

தற்போது இந்தப் பகுதியில் குடியிருப் புகள் அதிகரித்துள்ளதால், கால்நடை களுக்கு மேய்ச்சல் தரவை இல்லாத நிலை காணப்படுகிறது.

எனவே குறித்த மேய்ச்சல் தரவைக் காணி அரசுக்குச் சொந்தமான மேய்ச் சல் தரவையா அல்லது தனியாருக்குச் சொந்தமானதா என்பது தொடர்பான விபரங்களைத் தெரியப்படுத்த வேண் டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (ஒ-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பாலகர்கள்தான் பலிக்கடாவா?


200க்கும் குறைவான மாணவர்களைக்கொண்ட ஆரம்பப்பிரிவுப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு, அரசாங்கத்தின் உத்தரவுப்படி, அனைத்து மாகாணங்களின் ஆளுநர்களும் தீர்மானித்துள்ளனர். எதிர்வரும் 21ஆம் திகதி இந்தப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. பாடசாலைகளை ஆரம்பிப்பது என்ற அரசின் முடிவு வரவேற்கத்தக்கதுதான். அதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. மாதக்கணக்காக முடங்கிப்போயுள்ள கற்றல், கற்பித்தல் நடவடிக்கையை இனியாவது இயல்புக்குத் திருப்பவேண்டும் என்பதுதான் அனைவரினதும் பெருவிருப்பம் கூட. ஆனால், எவ்வாறான படிமுறையின் அடிப்படையில் பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டும், எந்தப் பிரிவுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் , மாணவர்களுக்கான தடுப்பூசி உள்ளிட்ட கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் பூர்த்தியாகிவிட்டன ? உள்ளிட்ட விடயங்களையும் கருத்தில்கொள்வது அவசியமல்லவா.?

பாடசாலைகளில் கொரோனாக் கொத்தணிகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத் தடுப்பூசி செலுத்தும் திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால், ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இன்னும் தடுப்பூசி வழங்கப்படவில்லை. எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் அவர்களுக்குத் தடுப்பூசியை முழுமையாக வழங்கும் திட்டமும் அரசிடம் இல்லை. எனவே, தடுப்பூசி செலுத்திய மாணவர்கள் (வயதுப்பிரினர்) இருக்கையில் எதற்காக ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்ற கேள்வி இங்கே எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

அத்துடன் ஆரம்பப் பிரிவு மாணவர்களை விட அவசர கற்றல் தேவையுடையவர்களாக, புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை, கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் உள்ளனர். இந்த வகைப் பிரிவுக்குள் உள்ளடங்கும் மாணவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறிருக்கையில் இவர்களை விட ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டிய தேவை என்ன என்பதை துறைசார்ந்தவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

கொரோனாப் பெருந்தொற்று, சமூக இடைவெளி, மாஸ்க், கிருமி நீக்கித் திரவம் இவை தொடர்பில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இருக்கும் அறிவு மிகக் குறைவு. இந்த விடயத்தில் அவர்களைக் கையாள்வதை விட மேற்குறிப்பிட்ட பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவர்களை இலகுவாகக் கையாளலாம். பெருந்தொற்று விடயத்தில் இயல்பான புரிந்துணர்வும் அந்த மாணவர்களுக்கு இருக்கும். அத்துடன் தொற்றுக்கள் ஏற்பட்டால் பச்சிளம் பாலகர்களை எவ்வாறு தனிமைப்படுத்துவார்கள்?, தொற்றில் இருந்து அவர்களை மீட்டு வருவதற்காக என்ன பொறிமுறை அரசிடம் உள்ளது?. இவையெல்லாவற்றையும் ஒரே நேர்கோட்டில் வைத்துப்பார்த்தால் இது எவ்வளவு பெரிய மடமைத்தனம் என்பது புலப்பட்டுவிடும்.

இவ்வாறான நெருக்கடிக்குள்ளும்- இடியப்பச் சிக்கல் நிலைக்குள்ளும் ஆரம்பப் பாடசாலைகளை முதலில் தேர்ந்தெடுத்து அவற்றை ஆரம்பிப்பதன் நோக்கம் தற்போது பூதாகரமாக மாறி ஆட்சியாளர்களை அச்சுறுத்தும் அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்தைக் கட்டுப்படுத்தி அவர்களை கற்பித்தல் நடவடிக்கையை நோக்கித் திருப்புவதற்கான தந்திரம்தானா? என்றும் எண்ணுவதில் தவறில்லை. அவ்வாறானதொரு அரசியல் லாபம் கொண்ட கபடநோக்கம் பாடசாலைகளைத் திறக்கும் விடயத்தில் அரசாங்கத்துக்கு இருக்குமானால் அதை உடனே சீர்செய்யவேண்டும். இல்லையேல் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாகி,கொரோனாவுக்கான பாடசாலைக் கொத்தணிகள் உருவாகுவது தவிர்க்கமுடியாது ,நிலைமை இன்னும் சிக்கலாகிவிடும். உரியவர்கள் உருப்படியான தீர்மானங்களை எடுத்து, பாலகர்களை பலிக்கடாவாக்காமல் பார்ப்பார்களா...?




# ஜி.எஸ்.பி. சலுகையை அரசு பாதுகாக்கும்

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக். 7**

**இலங்கையின் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பான யோசனை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது. நாட்டு நிலைவரம் பற்றி ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பாதுகாத்துக்கொள்ள முடியும் என நம்புகின்றோம் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

இதன்போது ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் அடையாளத்தை பாதுகாத்துக்கொண்டு, இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எமது நிலைப்பாடும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பாதுகாத்துக்கொள்வதற்காக எமது தரப்பில் முன்னெடுக்கப்படவேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்ன கலந்துரையாடினர் என்பது தொடர்பில் எமக்குத் தகவல் தெரியாது. இலங்கையின் எதிர்காலத் திட்டம் மற்றும் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.



இலங்கையின் மூவின மக்களும் சகோதரத்துவத்துடன் வாழ்கின்றனர் என்பதை அவர்கள் கண்டுள்ளனர். ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளும் இதனை உணர்த்திருப்பார்கள். எனவே, ஜி. எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை தக்கவைத்துக் கொள்ள முடியும் என நம்புகின்றோம், - என்றார்.

(ஒ-44)

# கோத்தாவின் பங்கேற்புடன் மிக முக்கிய கூட்டம் இன்று

கொழும்பு, ஓக். 7

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் விசேட கூட்டமொன்று இன்று நடைபெறவுள்ளது.

அமைச்சர்கள் மற்றும் முக்கியமான அரச அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்பார்கள்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் இன்று விசேட அமைச்சரவைக் கூட்டமொன்று இடம்பெறவுள்ளது என நேற்று தகவல் வெளியானது.

இது தொடர்பில் விளக்கமளித்த அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும,

நாளை (இன்று) விசேட அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளதாக வெளியாகும் தகவலில் உண்மை இல்லை. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இரு வாரங்களாக அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கேற்கவில்லை. எனவே, அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாட எதிர்பார்க்கிறார் என அமைச்சரவை செயலாளர் நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின் கருத்து வெளியிட்டார். இது விசேட அமைச்சரவைக் கூட்டம் கிடையாது - என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 03 . 1960



மறைவு 05 . 10 . 2021

## நடராசா குணபாலசிங்கம்

அன்னார் அமரர் நடராசா அமரர் பாக்கியம் அவர்களின் பாசமிகு மகனும், அமரர் கோபாலப்பிள்ளை அழகம்மா அவர்களின் அன்பு மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், புகதீசன், அமரர் கஜந்தி, விமலதாஸன், அமரர் சோமகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், அகிலா, சதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கவினா, எப்ஸியா, திருஷிகா, கிருஸ்பா, தர்மினா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், அமரர் சண்முகராசா, ஜெயலட்சுமி, நகுலேஸ்வரி, கோபாலரெட்ணம், சறோஜினிதேவி, புஸ்பராணி ஆகியோரின் அன்பு சகோதரனும், அமரர் குணரட்ணம், பிறேமாவதி, ஶ்ரீமாவதி, லீலாவதி, நாகரட்ணம், ரேவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2021) அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னுச்சாமி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்
மகன் - புகதீசன் - 077 1933 137
மருமகன் - சதீஸ்வரன் - 077 3716 494

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 21 . 02 . 1939



மறைவு 07 . 09 . 2021

## திருமதி அமுதலிங்கம் குணரத்தினம்மா

(ஓய்வுநிலை ஆசிரியர் - யாழ்/ உரும்பிராய் இந்துக் கல்லூரி)

திதி: ஆவணி மாத வளர் பிறை பிரதமை


கடந்த (07.09.2021) செவ்வாய்க்கிழமை எமது தாய் காலமாகிய செய்திகேட்டு, நேரிலும், தொலைபேசி மூலமாகவும் தமது அனுதாபங்களை தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளுக்கும், அனைத்து வழிகளிலும் ஓடி வந்து உதவி புரிந்த அன்பு உள்ளங்களுக்கும், வைத்தியசாலையில் எமது தாய் சிகிச்சை பெற்றுவந்த காலத்தில் உதவிகளும் ஒத்தாசைகளும் புரிந்த நல் உள்ளங்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இன்று (07.10.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விற்கு நாட்டில் நிலவும் அசாதாரண சூழ் நிலைமை காரணமாக உறவுகளை அழைக்க முடியாத நிலைக்கு நாம் மனம் வருந்துகின்றோம்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
இராஜேந்திரன் - குமுதினி

# நீங்கா நினைவுகளுடன் 31 ஆம் நாள் நினைவலைகள்...



## அமரர் சின்னையா செல்வராசா (செல்வி)

(உரிமையாளர் - செல்வி வாகன சுத்திகரிப்பு நிலையம், மற்றும் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையம் - மந்திகை)

தவப்பேறு 25.07.1950

சிவப்பேறு 07.09.2021

பத்துத் திங்கள் உனை சுமக்க - நான்
பாக்கியம் செய்யவில்லையடா
கண்மணிபோல் உன்னை காத்து நின்றோம்
நானும் என் கணவரும்
கண்ணுக்கு கண்ணான எங்கள் மகனுக்கு
ஏற்றதோர் துணை நின்றாய்

குடும்பத்தார் குற்றுயிராய் குமுறியழ
உறவினர்கள் ஊசலாடி விம்மியழ
ஊரவர்கள் உன் இழப்பால் பரிதவிக்க
உன்னை வளர்த்த என் இதயம் துடிதுடிக்க
வாழ்ந்தது போதுமென வானகம் சென்றாயோடா
எம்மோடு நீ வாழ்ந்த காலங்களை
எண்ணி எண்ணி ஏங்குகின்றேன்
என்று தான் உனை காண்பேன் தெரியவில்லை
மண்ணுலகில் வாழும் வரை மறப்பேனோ என் செல்வமே!

கவில்,
[illegible] தென்மேற்கு, புலோலி.

பொன்னையா இலட்சுமி
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# வெள்ளைப்பூண்டு மோசடி உண்மை

## ஒப்புக்கொண்டார் பந்துல

**கொழும்பு, ஒக்.7**

**சதொசவில் வெள்ளைப்பூண்டு மோசடி நடந்திருப்பது உண்மையே என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன நாடாளுமன்றில் ஒப்புக் கொண்டார்.**



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், பூண்டு மோசடி சதொச தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரிக்குத் தெரியாமல் நடந்துள்ளது. இந்த மோசடி தொடர்பான விசாரணை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் நடத்தப்படுகின்றது. பிரதமரோ அல்லது நானோ பூண்டு மோசடி தொடர்பில் முறைப்பாடளித்த ஊடகவியலாளர்களிடம் அறிக்கைகளைப் பதிவு செய்ய உத்தரவிடவில்லை. அது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளர்களை விசாரிக்க வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட அமைச்சு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

சதொசவில் இதுபோன்ற மோசடி நடப்பது இது முதல்முறை அல்ல. முன்னைய ஆட்சியின் போதும் இது போன்ற மிகப்பெரிய மோசடிகள் தொடர்பான ஆறு வழக்கு கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-4)

# இன்றைய நாள்



**மேடம்:** குடும்ப உறவுகளில் முன்னேற்றம் ஏற்படும். யோகம் கூடும். இதுவரை தடைபட்டிருந்த நன்மைகள் துரிதமாக நடைபெறும். சமீபத்தில் குழந்தைகளால் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும்.

**இடபம்:** எதிர்பாராத நல்ல விஷயம் ஒன்று நடைபெறும். புதிய ஆடை, நகை சேர்க்கை உண்டு. மகிழ்ச்சி கூடும். பணி சம்பந்தமாக வெளிநாட்டில் இருந்து அழைப்பு வரலாம். லாபமும் கூடும்.

**மிதுனம்:** பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். கலகலப்பான நாள். எதிர்பாலினத்தினரால் ஏற்பட்ட பிரச்சினை ஒன்று தீரும். திட்டமிட்ட விஷயங்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத சலுகைகளும், அரசு வழி அனுகூலங்களும் உண்டு. நாளின் முற்பாதியில் செலவும், பிற்பாதியில் நிதி நிலையும் உயரும். வீடு மாற்றம், இடமாற்றம் விரும்பத்தக்கதாக அமையும்.

**சிம்மம்:** கணவன் மனைவிக்குள் அனுசரித்து செல்ல வேண்டிய நாள் இது. குழந்தைகளால் ஏற்பட்ட பிரச்சினை அவர்களாலேயே தீரும். பெற்றோர் ஆதரவு ஓரளவே கிடைக்கும்.

**கன்னி:** திடீரென்று இடமாற்றமோ, பதவி மாற்றமோ வரலாம். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். தாயால் நன்மை வரும். பணிபுரியும் பெண்களுக்கு நிம்மதியளிக்கும் செய்தி உண்டு.

**துலாம்:** முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும். சிறிய நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு புதிய முயற்சிகளில் சிறு லாபம் கிடைக்கும். யோசித்து செய்வதே நல்லது.

**விருச்சிகம்:** தொழில் வளம் சிறக்கும். வீடு வாங்கும் யோகம் வரும். வரவுகள் திருப்தி தரும். செலவுகளும் சுபச்செலவுகளாக மாறும். தொட்டது துலங்கும். சமீபத்தில் ஏற்பட்ட சிரமம் நீங்கும்.

**தனுசு:** இளைஞர்களுக்கு வாகனம் வாங்கும் முயற்சி கைகூடலாம். வெளிநாட்டில் உள்ள பெரிய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். யாரிடமும் கடுமை காட்ட வேண்டாம்.

**மகரம்:** நின்ற தொழில் மீண்டும் உயிர் பெற வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து வேலைக்கான அழைப்பு வரலாம். நீங்கள் திட்டமிட்டு செய்த முயற்சி வெற்றி தரும்.

**கும்பம்:** பேச்சில் நிதானம் அவசியம். வேலைகளில் அதிக கவனத்துடன் செயலாற்ற வேண்டும். குழப்பங்கள் அகலும்.

**மீனம்:** மற்றவர்கள் பற்றிய வம்புகளில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. திடீர் நன்மை உண்டு. உங்களின் உழைப்பு வீணாகாது. நல்லவர்களின் நட்பு நலம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரங்கள் அருளும் நவராத்திரி விரதம்

## இன்று ஆரம்பம்

நவராத்திரி பண்டிகையின் 9 நாள்களில் முதல் 3 நாள்கள் அம்பாளுக்காக அர்ப்பணிக்கப்படுகின்றன. இந்த முதல் 3 நாள்களும் மஹேஸ்வரி, கௌமாரி, வாராஹி என்ற பெயர்களில் துர்க்கைக்கு சிறப்புப் பூசைகள் நடைபெறும். அடுத்த 3 நாள்கள் மகாலட்சுமிக்கு சிறப்புப் பூசைகள் நடக்கும். மகாலட்சுமி, வைஷ்ணவி, இந்திராணி என்ற பெயர்களில் இந்தப் பூசைகள் நடைபெறும். கடைசி 3 நாள்கள் சரஸ்வதி, நரசிம்ஹி, சாமுண்டி என்ற பெயர்களில் சரஸ்வதிக்குப் பூசைகள் செய்யப்படும்.



**புராணக் கதை:**

வரமுனி என்ற பெரும் சக்தி வாய்ந்த முனிவர் ஒருவர் இருந்தார். அவர் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கியவர். தனக்கு இணை யாரும் இல்லை என்ற தலைக்கனம் அவருக்கு ஏற்பட்டது. அவரது தலைக்கனம் காரணமாக அகத்தியர் போன்ற பெரும் முனிவர்களிடமும் மகிஷம் (எருமை) போல் உருவம் கொண்டு அவமரியாதையாக நடந்து கொண்டார். இதனால் கோபம் கொண்ட முனிவர்கள் அனைவரும் எருமையாக போவாய் என்று அவருக்குச் சாபமிட்டனர். ரம்பன் என்ற அசுரன் கடுமையான தவத்தில் ஈடுபட்டிருந்தான். அவன் தவத்தை மெச்சி அவன் முன் தோன்றினார் அக்னி பகவான். அவன் தனக்கு சர்வ வல்லமை பொருந்திய மகன் வேண்டும் என்று வேண்டினான். அவன் வேண்டியதை அருளிய அக்னி தேவன், ரம்பன்!, நீ கேட்ட வரத்தை அளித்தேன். நீ எந்தப் பெண்ணை ஆசை கொள்கிறாயோ அவள் மூலம் உனக்கு மகன் பிறப்பான் என்று கூறி மறைந்தார். மனம் முழுக்க உற்சாகத்துடன் இருந்த ரம்பன் முதலில் கண்டது காட்டெருமையை. அவனது அசுர புத்தி வேலை செய்தது. காட்டெருமை மேல் காதல் கொண்டான். தானும் காட்டெருமையாக உருமாறினான். முனிவர்களால் எருமையாய் பிறப்பாய் என்று சாபம் பெற்ற வரமுனி, அசுரனின் வாரிசாக மகிஷாசுரனாக பிறந்தான்.

மகிஷாசுரன் 10 ஆயிரம் ஆண்டுகள் பிரமனை நினைத்து தவம் இருந்தான். எனக்கு தேவர்கள், அசுரர்கள், மானிடர்களால் மரணம் ஏற்படக்கூடாது. கன்னிப் பெண்ணால் தான் மரணம் ஏற்பட வேண்டும் என்று வரம் கேட்டான். அவன் கேட்ட வரத்தை அருளினார் பிரம்மதேவன். அங்கு தொடங்கியது பிரச்சினை. மகிஷாசுரனின் அராஜகம் அதிகமாகியது. மகாவிஷ்ணுவைத் தஞ்சமடைந்தனர் தேவர்கள். மகிஷாசுரனுக்கு மரணம் பெண்ணால் தான். அவனை சம்ஹாரம் செய்யத் தகுந்தவள் மகாசக்தி மட்டும் தான் என்று கூறினார் மகாவிஷ்ணு. மும்மூர்த்திகளும் தேவர்களும் ஒன்று கூடி பிரார்த்தனை செய்ததும் ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களையும் ஒன்றாகப் பெற்ற மகாலட்சுமியாய் தோன்றினாள் அம்பாள். தங்களைக் காக்க வந்த தேவிக்கு தேவர்கள் படைக்கலங்களைப் படைத்தனர். சிவபெருமான் சூலம் தந்தார். அக்னி சக்தி தந்தார். வாயு பகவான் வில்லும், அம்பறாத்துணியும் கொடுத்தார். தேவி மகிஷனை சம்ஹாரம் புரிய சர்வலங்கார பூஷிதையாய் புறப்பட்டாள். அம்பாளுடன் கடும் போர் புரிந்தான் மகிஷாசுரன். கடும் போர் முடிவுக்கு வந்தது. அநீதி அழிக்கப்பட்டது. அழிந்தான் மகிஷாசுரன். அம்பாள் மகிஷாசுரனை சம்ஹாரம் செய்தது அஷ்டமி தினத்தன்று. தேவர்கள் அம்மனை வணங்கி வழிபட்டது அடுத்த நாளான நவமி தினத்தன்று. தேவிமணித்வீபம் (மூலஸ்தானம்) சென்றது. அதற்கு அடுத்த நாளான தசமி தினத்தன்று. இந்த நாள்கள் தான் நவராத்திரியின் கடைசி 3 நாள்களாகக் கொண்டாடப்படுகின்றது.

### மற்றொரு கதை:

மகிஷாசுரனை சம்ஹாரம் செய்ய அம்மன் 9 நாள் கொலுவிருந்து 10 ஆம் நாள் மகிஷாசுரனை சம்ஹாரம் செய்து மகிஷாசுரமர்த்தனியானாள் என்றும் கூறப்படுகின்றது. 9 நாள்கள் அம்மன் ஊசி மேல் தவம் நின்று தவம் புரிந்தாள். இதனால் நவராத்திரி தினமான 9 நாள்களும் ஊசியால் துணிகள் தைப்பதைத் தவிர்க்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. நவராத்திரியின் மற்றொரு சிறப்பம்சம். எப்போதும் காலையில் செய்யும் பூசை சிவனுக்கும், மாலையில் செய்யும் பூசை அம்மனுக்கு உரியது என்றும் கூறப்படும். ஆனால், நவராத்திரி தினங்களில் காலை, மாலை இரண்டு வேளைகளில் செய்யும் பூசையுமே அம்மனுக்கு உரியது தான்.

*(நன்றி: இணையம்)*

# தமிழ் பிரதேசங்களில் பணியாற்ற தமிழ் மொழித் தேர்ச்சி கட்டாயம்

கொழும்பு, ஒக்.7

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில், தமிழ் பேசும் சுகாதார அதிகாரிகளை மட்டும் நியமிக்க முடியாது. எனினும் அங்கு பணியாற்றுபவர்கள் தமிழ் மொழியில் தேர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்று ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.



> **தமிழ் தெரிந்தவர்களை மாத்திரம் நியமிக்குமாறு எம்மால் கோரிக்கை விடுக்க முடியாது.**

நாடாளுமன்றத்தில் வாய்மூல கேள்வி நேரத்தின் போது, இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமனவிடம், கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் சுகாதார சேவை அதிகாரிகள் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவர்கள் தமிழ் மொழிப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். அதனைவிட பரீட்சையில் அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளுக்கு அமையவே நியமனம் பெற்றுள்ளனர். இதில் அரசின் தலையீடோ அல்லது சுகாதார அமைச்சின் தலையீடோ இல்லை. ஆகேவே தமிழ் தெரிந்தவர்களை மாத்திரம் நியமிக்குமாறு எம்மால் கோரிக்கை விடுக்க முடியாது. ஆயினும் வடக்கு - கிழக்கில் பணியாற்றும் தாதியர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் தமிழ் மொழிமூலப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பது கட்டாயம் -என்றார். (ஒ-4)

# சட்டவிரோத கடத்தல்காரர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பா?

## சர்ச்சையை ஏற்படுத்தியது இந்தியப் புலனாய்வு நிறுவனம்

கொழும்பு, ஒக்.7

சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும், விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் தொடர்பு உள்ளது என்ற தகவலை இந்தியாவின் தேசிய புலனாய்வு முகாமை அமைப்பு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இலட்சத்தீவில் இருந்து இலங்கை சென்ற மீன்பிடிக் கப்பலில் கடந்த ஆண்டு கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் போதைப்பொருள்கள் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டவை. இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்கள் பின்னர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்று கண்டறியப்பட்டனர். இதனை அடிப்படையாகக் கொண்டு, விடுதலைப்புலிகளே குறித்த கடத்தலைச் செய்துள்ளனர் என்று அறியப்பட்டுள்ளது. தமிழ்நாடு, இலங்கை மற்றும் வெளிநாடுகளில் அமைந்துள்ள அமைப்பின் தலைவர்களின் மேற்பார்வையின் கீழ், புலிகளின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக இவர்கள் இரகசியமாக வேலை செய்து வருகின்றனர்.

போதைப்பொருள், தங்கம் கடத்தல் நடவடிக்கைகள் மூலம் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவர் நிதி சேகரித்தார் என்று விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.- என்றுள்ளது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது உரத்தை நிராகரித்து தவறிழைத்துவிட்டது இலங்கை

## சீனத் தூதுவர் எச்சரிக்கை



**கொழும்பு, ஒக்.7**

**சீன நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்படவிருந்த இயற்கை உரத்தை நிராகரித்து, இலங்கை தவறிழைத்துவிட்டது. இதனால் இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான உறவு விரிசலடையும்**

என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், இரு நாடுகளுக்கும் இடையிலான நம்பிக்கையை சிதைக்காத வகையில் செயற்படுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

இதற்குப் பதிலளித்துள்ள அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, சீன நிறுவனத்திடம் இருந்து இறக்குமதி செய்யப்படவிருந்த உரத்தின் மாதிரிகளைப் பரிசோதித்த பின்னர் நிராகரிக்க ஏதுவான காரணங்கள் கண்டறியப்பட்டன. எனினும் சீன நிறுவனத்திடம் இருந்து மற்றுமொரு உர மாதிரி வரவழைக்கப்பட்டு பரிசோதனை நடத்தப்படும். ஏற்கனவே வரவழைக்கப்பட்ட இரண்டு உர மாதிரிகளில், அவை உழவுக்குப் பயன்படுத்த தகுதியற்றவை என்றும் நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் அடங்கியுள்ளன என்றும் கண்டறியப்பட்டுள்ளன -என்றார். (ஒ-4)

## முதலாம் பக்கத்தொடர்ச்சிகள்....

### 'பண்டோரா...

ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

"பண்டோரா ஆவணங்களில் இலங்கையில் உள்ள சிலரின் பெயர்களும் வெளியாகியுள்ளன. மோசடியான முறையில் நிதியை சேகரித்துள்ளமை, நிதியைப் பதுக்கிவைத்துள்ளமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இதில் சுமத்தப்பட்டுள்ளன. 'பண்டோரா' ஆவணங்களில் பல உலகப் பிரபல்யங்களின் பெயர்கள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தானில் இவ்வாறு வெளியாகியுள்ள நபர்கள் தொடர்பில் தற்போதைய சூழலில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆவணங்களில் உள்ள தகவல்கள் உண்மையாயின் வரலாற்றில் மிகபெரிய மோசடிகளாக இவை அமையும். மோசடிகளுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை வெளிப்படுத்த வேண்டும். மோசடியில் கூறப்படும் தொகையானது எமது நாடு பிற நாடுகளில் பெறும் கடன் தொகைகளையும்விட அதிகமானதாகவுள்ளது.

நாடு மோசமான நிலையில் உள்ளது. மக்களின் வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. அந்நியச் செலாவணி வீழ்ச்சியடைந்துள்ளது. டொலர் இல்லை இல்லை என்ற குரல்தான் நாடு முழுவதும் ஒலிக்கிறது. ஆனால், நாட்டுக்கு வெளியில் டொலரை பதுக்கி வைத்துள்ளனர்.

இந்தநிலையில், வெளியாகியுள்ள நிதி மோசடிகள் தொடர்பில் முழுமையான விசாரணை செய்யப்பட்டு அந்த நிதி யாரிடம் உள்ளது என்பது தொடர்பில் பக்கச்சார்பற்ற வெளிப் படையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும்-என்றார். (த-22)

### 13ஐ முற்றாக...

கொழும்பு, ஒக். 7

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்கள் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். 13 ஆவது திருத்தத்துக்கு அமைய அதிகாரப் பரவலாக்கலை உறுதி செய்யும் வகையில் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்.

இவ்வாறு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் வலியுறுத்திக்கூறியுள்ளார் இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஸ்ரீங்லா.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போது இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது என்று இந்திய வெளியுறவு செயலாளரின் இலங்கைப் பயணத்தை அடுத்து, இலங்கைக்கான இந்தியத் தூதரகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தத்தின் பலவீனம் போன்றே, அதிலுள்ள பலத்தையும் கண்டறிந்து அதனை நிறைவேற்ற அரசு செயற்படும் என்று மேற்குறித்த சந்திப்பின்போது ஜனாதிபதி கோத்தாபய இந்திய வெளியுறவுச் செயலாளரிடம் தெரிவித்திருந்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று முன்தினம் குறிப்பிட்டிருந்தது.

இதேவேளை- பிரதமர் மஹிந்த ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆகியோருடனான சந்திப்பின்போதும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம், அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் இந்திய வெளியுறவுச் செயலாளர் கவனம் செலுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-22)

## நாட்டு வளங்களை விற்பது முதலீடல்ல

### பொன்சேகா விசனம்



கொழும்பு, ஒக்.7

நாட்டின் தேசிய வளங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்வது முதலீடு அல்ல என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவிக்கையில்;

பிரதமர் மஹிந்த ராஜபக்ச கூட்டு எதிர்க்கட்சியில் இருந்தபோது, தமது அரசு ஆட்சிக்கு வந்தவுடன், நல்லாட்சிஅரசு வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்த அனைத்து உள்ளூர் வளங்களையும் மீளப்பெறுவோம் என்று கூறினர். எனினும் தற்போதைய அரசு அதற்கு மாறாகச் செயற்படுகின்றது. உள்ளூர் வளங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்வதை அரசு முதலீடு என்று அழைத்தாலும், தேசிய வளங்களை விற்பனை செய்வது முதலீடு அல்ல. -என்றார். (ஒ-4)

## விசாக்காலம் மீண்டும் நீடிப்பு

கொழும்பு, ஒக்.7

நாட்டிலுள்ள வெளிநாட்டவர்களின் அனைத்து வகையான விசாக்களினதும் செல்லுபடியாகும் காலம் எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக மே மாதம் 11 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் காலாவதியாகும் விசாக்களுக்கு, விசா கட்டணம் மாத்திரம் அறவிடப்படும் என்று குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## 2011 உலகக்கிண்ணத்தில் ஆட்டநிர்ணயச் சூதாட்டம்!

### மஹிந்தானந்த மீண்டும் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 7

2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் ஆட்டநிர்ணயச் சூதாட்டம் இடம்பெற்றது. ஆனால், வீரர்களை விசாரிப்பதால் எந்தப் பயனும் இல்லை. வீரர்களை விசாரிக்க வேண்டும் என்று நான் கோரவும் இல்லை என்று தெரிவித்தார் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் ஆட்ட நிர்ணயச் சதி இடம்பெற்றது என்று நான் கூறினேன். எனினும் அது தொடர்பிலான விசாரணைகள் குறித்து நான் திருப்தி அடையவில்லை. ஏனெனில் ஆட்ட நிர்ணயச் சதியுடன் வீரர்களுக்கு தொடர்புண்டு என நான் கூறவில்லை. சங்கக்கார, மகேல, அரவிந்த ஆகியோரை விசாரணை செய்யுமாறு நான் கோரவில்லை.

இலங்கைக் கிரிக்கெட் சபையின் கிரிக்கட்டின் தலைவர் டி.எஸ்.டி சில்வா, செயலாளர் நிசாந்த ரணதுங்க, அணியின் முகாமையாளர் சுராஜ் தந்தெனிய ஆகியோரிடம் விசாரணை செய்யவில்லை. இந்த நபர்களிடமே விசாரணை நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

இந்த விவகாரம் பற்றி பேசியதனால் கடந்த பொதுத்தேர்தலில் நான் கண்டி மாவட்டத்தில் இரண்டாம் இடத்துக்குப் பின்தள்ளப்பட்டேன். தற்பொழுதும் ஆட்ட நிர்ணய சதிகள் இடம்பெறுகின்றன - என்றார். (ம)



## குடும்பங்களுடன் சேர வழியேற்படுத்துங்கள்

### ஈரான் அகதிகள் ஆர்ப்பாட்டம்

7 வருடங்கள் பிரிந்திருந்ததுபோதும், இனியாவது எங்களை குடும்பங்களுடன் சேர்ந்திருக்க வழியேற்படுத்துங்கள் என்று ஈரானைச் சேர்ந்த அகதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையில் தங்கியிருக்கும் அகதிகள், கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாங்கள் குடும்பங்களை விட்டுப் பிரிந்து; பிள்ளைகளுக்குக் கற்றல் வசதியும் இன்றித் தவிக்கின்றோம். எனவே எங்கள் குடும்பங்களைச் சந்திக்க உதவுங்கள்.

அதிகாரிகளிடமிருந்து நியாயமான பதில் கிடைக்கும் வரை உணவு தவிர்ப்பு போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளோம் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 10 . 1937



மறைவு
06 . 10 . 2021

## கதிரவேலு சத்தியமூர்த்தி

**(பணிப்பாளர், நியூ பீக் கோண் அக்கடமி)**

அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கதிரவேலு சத்தியமூர்த்தி (நியூ பீக்கோண் அக்கடமி-பணிப்பாளர்) அவர்கள் நேற்று (06.10.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - முத்தாபரணம் தம்பதியரின் அன்பு மகனும், கனகரத்தினம், பேரின்பநாயகம், சிவஞானசுந்தரம், தட்சணாமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி தெற்கிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (07.10.2021) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சிவசக்தி கோயிலடி**
**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 162 கிலோகிராம் மஞ்சளுடன் கிளிநொச்சியில் இருவர் கைது

கிளிநொச்சி, ஒக். 7

கிளிநொச்சி முழங்காவில் நொச்சி முனை பகுதியில் 162 கிலோகிராம் மஞ்சள் கட்டிகள் மீட் கப்பட்டுள்ளன.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நொச்சிமுனை கடற்கரையிலிருந்து 4 சாக்கு மூடைகளில் அவை மீட்கப் பட்டுள்ளன.

அவற்றை வைத்திருந்தனர் என்ற குற் றச்சாட்டில், நொச்சிமுனையை சேர்ந்த 39 வயதான ஒருவரையும் அன்பு புரத் தைச் சேர்ந்த 22 வயதான ஒருவரை யும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். மீட்கப்பட்ட மஞ்சளுடன் சந்தேக நபர் களை கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. (கு-214)

# 24-9273 இலக்க இசுசு லொறி விற்பனைக்கான கேள்விக் கூறுவிலை கோரல்

எமது சங்கத்தில் நல்ல நிலையில் உள்ள 24-9273 இலக்க இசுசு லொறி விற்பனைக்கான கேள்விக் கூறுவிலை கோரப்படுகின்றது. சங்க காரியாலய நேரத்தில் லொறியினை பார்வையிட்டு பின்வரும் தொகைப்பணத்தை தலைமைக் காரியாலயத்தில் (பருத்தித்துறை வீதி, புத்தூர்) செலுத்தி கேள்விக் கூறுவிலைக்கான விண்ணப்ப படிவத்தினைப் பெற்று 15.10. 2021ந் திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கீழ் காட்டப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கேள்வி வைப்பு பணம் (மீளளிக்க முடியாதது 1000.00)
கேள்வி வைப்பு பணம் (மீளளிக்க கூடியது 5000.00)

கேள்விக் கூறுவிலை தொடர்பாக சங்க இயக்குனர் சபையின் முடிவே இறுதியானது.

பொது முகாமையாளர்
வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு
கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி.
T.P. No-021 321 5262 07.10.2021

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 02 . 1981



மறைவு
06 . 10 . 2021

## அமரர் Dr.S.சக்திபாலன்

**(மாவட்ட இணைப்பாளர் உளநலம் (Mental Health) மற்றும் தொற்றா நோயியல் (NCD) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, மன்னார்)**

தொல்புரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் மன்னார் நானாட்டானை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி சக்திவடிவேல் சக்திபாலன் நேற்று (06.10.2021) புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சக்திவடிவேல் (வடிவேல் வோச் வேக்ஸ், யாழ்ப்பாணம்), திலகவதி ஆகி யோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விவேகானந்தன் (இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர், மன்னார்) சிறீஜெயதேவி ஆகியோரின அன்பு மருமகனும், துவாரகா (ஆசிரியர், மன்/முருங்கன் மகா வித்தியாலயம்) இன் அன்புக் கணவரும், சக்திகா, சக்திபிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதா (கனடா), யானு (லண்டன்), லோஜினி (பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிதரன் (கனடா), ஜெயசீலன் (லண்டன்) தவக்குமார் (அபி விருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை), Dr. முரளி (பொது மாவட்ட வைத்தியசாலை, திருகோணமலை), Dr. வசீகரி (பொது மாவட்ட வைத்திய சாலை, திருகோணமலை) ஆகியோரின் மைத்துனரும், ஹரில், ஆகாஷ், அபிலாஷ், ஹரித், அக்ஷயா, திவ்யன், கபிஷா, அக்ஷாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் நானாட்டான் இந்து மயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்பு: 077 378 4085**
**077 653 1622**
**077 558 1536**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு
23 . 01 . 1936



இறப்பு
04 . 10 . 2021

## சந்தியப்பிள்ளை றீற்றம்மா (ராணி)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை அன்னம்மா கோவில் வீதி, பண்டியந்தாழ்வை பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியப்பிள்ளை றீற்றம்மா 04.10.2021 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியப்பிள்ளையின் (சுந்தரம்) மனைவியும், பொலின் ஜெனவி, காலஞ்சென்ற அன்ரன் (பாலன்) மற்றும் ஜோசப்மிரால் (வெள்ளைக்குட்டி), கிறிஸ்ரியன் (வவி), பொலின் மேசி, டல்சி, பப்சி, ஜீவா ஆகியோரின் அன்புத் தாயும், சத்தியகுமாரன், சுதன், றெமியன் மற்றும் றோஸ் பிறேமா, பவாணி ஆகியோரின் மாமியும், மவுண்பேட்டன், பிரதிப்குமார், பிரதீபன், டிலான், பிரவின், நிரோசன், நிரோசி, பிரிந்தியா மதுசினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.10.2021) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் (பெரிய கோவில்) திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**மகன் - கிறிஸ்டியன்**
**மகன் - ஜோசப்மிரால்**
**மருமகன் - சத்தியகுமார் (சத்தி)**
**மருமகன் - சுதன்**
**மருமகன் - றெமியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2022 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2022.01.01ஆம் திகதி தொடக்கம் 2022.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 07.10.2021 – 21.10.2021 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 22.10.2021 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 22.10.2021 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 13,074,050.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 117,975.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1,000.00 | 10,000.00 | 2,958,450.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 96,800.00 | 250.00 |
| 5 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 41,503.00 | 250.00 |
| 6 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 179,300.00 | 250.00 |
| 8 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 197,230.00 | 250.00 |
| 9 | கோழி உரித்தல் கடை இல-05 | 750.00 | 7,500.00 | 134,310.00 | 250.00 |
| 10 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 73,810.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 29,349,155.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 55,047.00 | |
| 3 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 740,036.00 | 250.00 |
| 4 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 229,900.00 | 250.00 |
| 5 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 77,138.00 | |
| 6 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 60,500.00 | |
| 7 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 369,446.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 926,387.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 187,550.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40,500.00 | 250.00 |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2021.11.05ம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2021.11.05 ம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
5. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
6. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
7. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை "**தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்**" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை "**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்**" எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
9. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
10. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
11. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
12. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
13. இணுவில் வாராந்தச்சந்தை வருமானங்களை ஈட்டும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது சமுர்த்தி வங்கிக்கு அருகிலுள்ள கட்டடத்தொகுதியில் நடாத்தப்படவேண்டும்.
14. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**க.தர்ஷன்**
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

# நோயாளியை மயக்காமல் சிறுநீரக சத்திர சிகிச்சை



கொழும்பு,ஒக்.7
இலங்கையில் முதல்முறையாக நோயாளியை மயக்கமாக்காமல் சிறுநீரகத்தில் கல் அகற்றும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்ட மருத்துவமனையில் வெற்றிகரமாக வித்தியாசமான முறையில் இந்தச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய தொழில்நுட்ப இயந்திரத்தின் உதவியுடன் இந்தச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் நோயாளியின் சிறுநீரகம் முழுவதும் பரவியிருந்த 5 சென்ரி மீற்றர் அளவிலான கல் மற்றும் மேலும் சில சிறிய கற்கள் அகற்றப்பட்டன என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4)


**கிளிநொச்சியில் வர்த்தக நிலையத்திற்கு பணியாளர் தேவை**
1. **சாரதிகள்** (10 சில்லு வாகனம் செலுத்தக்கூடிய முன் அனுபவம் உடையவர்கள்)
2. **கணக்காளர்**- கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
ஆண்கள் மட்டும்
தொடர்புகளுக்கு: 077 772 2305


## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கடமையாற்றும் ஆயுர்வேத வைத்தியர் **திருமதி ஜீவலதா சுகுமாரன்** அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் விஸ்வலிங்கம் நாகராஜா**

அவர்கள் 28.08.2021ம் திகதி இறைவனடி சேர்ந்தமையால் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா இளைப்பாறிக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை.**

## துயர் பகிர்கின்றோம்

தோற்றம் 24 . 02 . 1943



மறைவு 28 . 09 . 2021

எமது பாடசாலையின் அதிபரான **திரு.பாலசிங்கம் பாலசுப்பிரமணியம்** அவர்களின் அன்புத் தந்தையார்

**சுப்பிரமணியம் பாலசிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்**
**சித்தன்கேணி.**

## முடிவில்லா நினைவலைகளின் 16 ஆம் ஆண்டு

இறைவருக்கும் மகளாய் 22.08.1984



இறைவனுக்கு மகளாய் 07.10.2005

**செல்வி மாதவராஜா தனுஷா**

(2 ஆம் வருட கலைப்பீட மாணவி, யாழ் பல்கலைக்கழகம், பழைய மாணவி, மகளிர் மகா வித்தியாலயம், இறம்பைக்குளம் வவுனியா)

**திதி: சதுர்த்தி**

கண்களும் பட்டனவோ காலன் உனைப் பறித்திடவே
கரைகாணாத சோகத்தில் நாம் இங்கு அழிந்திடவே
மண்ணிலே வாழும்வரை மறைந்திடாது உன் நினைவு
எம்மோடு உலாவந்த ஒளி நிலவே!
எந்நாளும் நினதன்பு நிழல்போல் துணைவருமே.

பொ.மாதவராஜா
அண்ணாவி வளவு,
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

என்றும் மீளாத் துயருடன்
பெற்றோர், தம்பி
021 224 2046

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது மாவட்டப் பாடசாலைகளின்
பழைய மாணவனும் நண்பனுமாகிய

## ஹரிதாஸ் அருச்சுனன் அவர்கள்

இன்று (07.10.2021) வியாழக்கிழமை
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நிகழ்நிலை மூலம்
நடைபெற்றுக்கொண்டிருக்கும் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு
விழாவில் (பகுதி இரண்டு)
சூழல் முகாமைத்துவத்தில் முது விஞ்ஞானமாணிபட்டம்
(MSc in Environmental Management,
2nd Class Upper Division) பெறுவதை வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர் : நண்பர்கள் மற்றும் பழைய மாணவர்கள்
இ.ரவிச்சந்திரன் சார்பாக
கிளிநொச்சி / புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்
கிளிநொச்சி / இந்துக் கல்லூரி
கிளிநொச்சி / மத்திய மகா வித்தியாலயம்


## பெயர் மாற்றம்

கற்பகப்பிள்ளையார் கோவிலடி உரும்பிராய் வடக்கில் வதியும் **யூட்ஹேமன் ருஷாந்தன் இராஜகாரியர்** ஆகிய நான் எனது பெயரை **இராஜகாரியர் ருஷாந்தன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிசெய்கின்றேன்.

**இராஜகாரியர் ருஷாந்தன்**

## சிறுநீரகம் தேவை

B+ இரத்த வகையை கொண்ட சிறுநீரகம் தேவை.
தொடர்பு:
**0777 110 687**

## Faculty of Medicine, University of Jaffna
## Vacancy
### Post of Temporary Demonstrator

Interview for the above post will be held on 26.10.2021 at 11.00 am via online at the Board Room, Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil.

Applications are entertained from those who have passed the final examination of the MBBS or BSc degrees obtained in Allied Health Sciences from theState Universities or UGC recognized foreign Universities.

Salary Scale: Rs 40,920.00 (Fixed)

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of the relevant certificatesalong with the duly filled application in the prescribed application form.

The applications and scanned copies should reach, the following email address **on or before 11.10.2021:**
**E-mail address :deanmedicine@univ.jfn.ac.lk**

Application forms and other details are available in the Faculty of Medicine Website link:**http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf**

Applicants are requested to send the prescribed application form downloaded from the website with the paid Bank slip for the deposit / Cash deposit Machine receipts(CDM) of a sum of Rs.100.00 credited to the people's Bank Account no. (Ref No): 970000090000387of Bursar University of Jaffna.

**Note: The zoom link for the interview will be sent only to the shortlisted candidates.**

Registrar
University of Jaffna
06.10.2021

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு
கேள்வி அறிவித்தல்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு
2021/2022 ஆம் ஆண்டிற்குதேவையான
வழங்கல்கள்/சேவைகள்

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 2021/2022ம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

அ) பச்சை மரக்கறி உணவு வழங்கல்கள்
ஆ) அழுக்குத்துணிகள் சலவை செய்தல்
இ) வாகன டயர்கள் & பற்றறிகள்
ஈ) வாகன சுத்திகரிப்பு சேவை

2021 முதல் 2022 வரையான ஒரு வருட காலப்பகுதிக்கு வழங்கல்கள். சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 06.10.2021 தொடக்கம் 26.10.2021 ம் திகதி வரை காலை 9.30 மணி முதல் பி.ப.3.00 மணி வரையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு/தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் / சேவைக்கான ஒரு ஆவணத் தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

1. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
2. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள் சேவைகள் என்பவற்றுக்கான மீளளிக்கப்படாத வைப்புத்தொகை முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்தியசுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 26.10.2021 திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கூடியவாறு தலைவர். கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்விபெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 27.10.2021 மு.ப. 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
3. ஏற்கனவே சேவையை வழங்கி வரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாக கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
4. கேள்வி தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.
5. மேலதிக தகவல்களை அலுவல நேரங்களில் (தொ.இல.021 229 0111, Fax : 021 2290 104) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
6. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

அ) சமைத்த உணவு வழங்கல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பிணைமுறி (ரூபா) |
|---|---|---|
| ஆதார வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 2,000.00 | 50,000.00 |
| ஆதார வைத்தியசாலை, மல்லாவி | 2,000.00 | 50,000.00 |

ஆ) அழுக்குத் துணி சலவை செய்தல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பிணைமுறி (ரூபா) |
|---|---|---|
| பிரதேச வைத்தியசாலை, நட்டான்கண்டல். | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, சம்பத்நுவர | 500.00 | 4,000.00 |

இ) வாகன டயர்கள் & பற்றறிகள் வழங்கல்

மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) 1,000.00


| வாகன டயர்கள் அளவுகள் | | |
|---|---|---|
| 195 x 15 | 245 x 70 x R16 | 750 x16 Tyre with tube & flab |
| 700 x 16 Tyre with tube & flab | 205 x 15 | 215 x R16 |
| 750 x 16 Tyre with tube & flab | 215 x 75 x R15 | 265 x 65 x R17 |
| 255 x 70 x R16 | 8.25 x 20(14P) | 215 X65 x16C |
| 245 x 75 xR16 | 205X R16 | 90Amp Battery |
| 255 x 70 x R16 | 265 x 65 x R17 | 100Amp Battery |
| 265 x 70 x R16 | 35Amp Battery | 120Amp Battery |
| 900 x 20 Tyre with tube & flab | 45Amp Battery | 150 Amp Battery |

ஈ.) வாகன சுத்திகரிப்பு சேவை

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பிணைமுறி (ரூபா) |
|---|---|---|
| வாகன சுத்திகரிப்பு சேவை | 2,000.00 | 50,000.00 |

தலைவர்
பிராந்திய பெறுகைக் குழு
பி.சு.சே.ப.பணிமனை,
முல்லைத்தீவு.

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் லூயிஸ் டோமினிக் தனுசன்

தோற்றம் 06.09.1990
மறைவு 07.10.2014

எம் இதயங்களெல்லாம் நொருங்க
இமைகளெல்லாம் நனைய
எங்களைத் தவிக்க விட்டு
நெடுந்தூரம் சென்றதேனோ
ஆண்டுகள் ஏழு சென்றதுவோ
மறையாதையா உன் நினைவு

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கைதிகளுக்கு...

நாடாளுமன்றத்தில் சிறைக்கைதிகள் மற்றும் அவர்களின் பாதுகாப்பு, நலன்கள் குறித்து நேற்று ஐக்கிய மக்கள் சக்தி கொண்டு வந்திருந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கூறிய விடயங்களுக்குப் பதிலளித்தபோது, நீதி அமைச்சர் மேலும் கூறுகையில்; "அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ்க்கைதிகளுக்கு ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் இங்கு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இராஜாங்க அமைச்சர் மூலமாக இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி அந்த அறிக்கையை உரிய அதிகாரிகளுக்கு எமது அமைச்சு வழங்கும். குற்றம் தொடர்பில் பொலிஸார் வேறு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இன்றும் என்னுடன் இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தார். ஆகவே இந்த விடயத்தில் நான் தலையிட நினைக்கவில்லை. அநுராதபுரம் சிறைச்சாலைக்குச்சென்று குறித்த கைதிகளுடன் நான் கலந்துரையாடினேன். அதன்போது தாம் யாழ்ப்பாணத்துக்குச் செல்ல வேண்டும் என அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

எனினும் தங்களுக்கு அநுராதபுரம் சிறையில் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக அவர்கள் என்னிடம் கூறவில்லை. நான் மீண்டும் மீண்டும் தமிழ் மொழியில் அவர்களுடன் பேசினேன். எனினும் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக அவர்கள் என்னிடம் ஒருதடவைகூடக் கூறவில்லை. ஆயினும்அ வர்களின் பாதுகாப்பை முழுமையாக உறுதிப்படுத்த நாம் தயாராக உள்ளோம். உயர் நீதிமன்றமும் அதனையே சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, அவர்களை யாழ்ப்பாணத்துக்கு மாற்றுவதென்றால் பாதுகாப்பு தரப்புடன் கலந்துரையாட வேண்டும். அவர்களை கொழும்பு அல்லது தும்பர சிறைக்கு மாற்ற விருப்பம் கேட்டேன், ஆனால் அவர்கள் அதற்கு விரும்பவில்லை. எனவே யாழ்ப்பாணத்துக்கு மாற்றுவது தொடர்பில்- மீண்டும் கவனம் செலுத்துவேன் - என்றார். (த-22)

## கீரிமலைக்...

யில் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரது சடலம் சில மணித்தியாலங்களின் பின்னர் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமதியம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில், யாழ்ப்பாணம் கலட்டியைச் சேர்ந்த சூரியகாந்தன் சஞ்சீவன் (வயது -18) என்பவரே உயிரிழந்தார். உறவினர்களுடன் அந்தியேட்டிக் கிரியைக்காகச்சென்ற இளைஞர்களில் நால்வர், கடலில் குளித்துள்ளனர். அதன்போதே ஒருவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இளைஞனைக் தேடும் பணியை காங்கேசன்துறை பொலிஸாரின் அழைப்பில் கடற்படையினர் மேற்கொண்டனர்.

எனினும், இளைஞன் சடலமாகவே மீட்கப்பட்டார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-26)

## கூட்டமைப்பினரையும்...

விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்" என்று ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய வரவு - செலவுத் திட்டத்தில் எமது மக்களின் வாழ்வாதாரத் திட்டங்களுக்காக பல மில்லியன் ரூபா நிதியை அமைச்சர் பஸில் ராஜபக்ச ஒதுக்குகின்றார்.

கடந்த காலத்தின் ஏமாற்று வேலைத்திட்டங்களில் ஒன்றான சஜித் பிரேமதாசவின் வீட்டுத்திட்டத்தால் இன்றும் மக்கள் இன்னல்களை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி இராஜாங்க அமைச்சருடன் பேசியிருக்கிறோம். வரும் வரவு செலவு திட்டத்தில் இந்த விடயத்துக்குத் தற்காலிக தீர்வையேனும் காண வேண்டும்.

நேற்று எதிரணியில் ஒருவர் பசளை பையுடன் வந்து அரசை விமர்சித்தார். அப்போது, சஜித் பிரேமதாசவின் வீட்டுத் திட்டத்தை அப்படியே கிளப்பிக் கொண்டு வந்து பதில் சொல்லலாம் போல தோன்றியது.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி கவலைப்படாத தமிழ்த் தலைமைகளின் மத்தியில், எமது மக்களின் அடிப்படை பிரச்சினைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் துணையுடன் தீர்த்து வருகிறோம். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர், நாடாளுமன்றத்தில் இனவாதத்தை தவிர வேறொன்றையும் பேசுவதாகத் தெரியவில்லை. முஸ்லிம் மக்களுக்காக பேசும் தமிழ்த் தலைமைகள் பலர் கடந்த தேர்தலில் முஸ்லிம் மக்களைப் பற்றி கடுமையாக விமர்சித்தவர்களே.

புலம்பெயர் தமிழ்த் தரப்புகளுடன் பேச்சு நடத்தத் தயாரென ஜனாதிபதி கூறியதும் கொதித்து எழுகின்றீர்கள். அப்படி பேசினால் உங்களின் பிழைப்பில் மண் வீழ்ந்து விடும் என்றே கொதித்தெழுகின்றீர்கள். நீங்கள் மக்கள் நலன்பற்றி சிந்திப்பதில்லை. அப்படி சிந்தித்திருந்தால், இறுதிப்போரின்போது உங்கள் தொலைபேசிகளை நிறுத்தி விட்டு சொகுசு அறைகளில் ஓய்வெடுத்திருக்க மாட்டீர்கள்.

குற்றவிசாரணையை இராணுவத்தினரிடமும் புலிகளிடமும் மட்டுமல்ல, கூட்டமைப்பிலுள்ள அனைத்து கட்சிகளைச் சேர்ந்தவர்களிடமும் மேற்கொள்ளவேண்டும். சகோதரப் படுகொலையை நடத்தியவர்களுக்கு ஆதரவாக கூட்டமைப்பினர் பேசுவது வேதனையானது.- என்றார். (த-இ)

## குருநகர்...

டுத்தினர்.

கட்கட தீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த குருநகர் மீனவர்களின் படகை இந்திய மீனவர்களின் படகு நேற்றுமுன்தினம் மோதியது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சேதப்படுத்தப்பட்ட படகை குருநகர் கடற்படை முகாமுக்கு முன்பாக நிறுத்தி கடற்றொழிலுக்கு செல்வதை தவிர்த்து பிரதேச மீனவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

470 க்கும் மேற்பட்ட படகுகள் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன என்றும் 2ஆயிரத்து 700 க்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்று தொழிலுக்கு செல்லவில்லை என்றும் மீனவப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (த-இ)

## கடல்நீரை...

திட்டத்தின்கீழ் குறித்த திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

நயினாதீவில் முழுமைப்படுத்தப்பட்டுள்ள கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம், தாழையடி கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் ஆரம்பப் பணிகள், கிளிநொச்சி - யாழ்ப்பாணம் நகர நீர்வழங்கல் திட்டம் ஆகிய திட்டங்களே நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் ஊடாக 186 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு பாதுகாப்பான குழாய் நீரை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதுடன் மத்திய அரசின் நிதி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் இந்தத்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

தாழையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் ஊடாக நீர் சுத்திகரிப்புக்கான தொழில்நுட்பத்துடன் கடல் நீரை சுத்தமான குடிதண்ணீராக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அந்தத்திட்டம் மற்றும் யாழ். நகர நீர் வழங்கல் திட்டத்தின் பாதுகாப்பான நீர்க் குழாய்களை பொருத்துவதன் மூலம் சுமார் மூன்று இலட்சம் மக்கள் நன்மையடைவதுடன் அந்தத்திட்டங்களை 2023ஆம் ஆண்டளவில் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப்புதிய வேலைத்திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணம் நகரம் மற்றும் அதனை அண்மித்து வாழும் சுமார் 12 இலட்சம் மக்களுக்கு குழாய் மூலமான பாதுகாப்பான நீரை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும்.

மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்ட நயினாதீவு கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் ஊடாக நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளுக்கான நீர் விநியோகம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இதன்மூலம் சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் நேரடியாக நன்மையடைவர் என்று பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் நாயகம் கென்ச்சி யொகுஹாமா ஸூம் தொழில்நுட்பம் ஊடாக இந்நிகழ்வில் கலந்து கொண்டு இந்தத்திட்டத்துக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் தற்போது காணப்படும் 9.6 சதவீதமான பாதுகாப்பான நீர் குழாய் அமைப்பை 2025ஆம் ஆண்டளவில் 56.9 சதவீதமாக உயர்த்துவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை திட்டமிட்டுள்ளது.

இந்நிகழ்வில், கிராமிய பிரதேச குடிதண்ணீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் இ.அங்கஜன், யாழ்.மாவட்டச்செயலர் க.மகேசன், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.பாரதிதாசன் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-20)

## சாவு 43!...

என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

அதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 185 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 43 பேரில் 23 ஆண்களும், 20 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 5 ஆண்கள், 2 பெண்கள் என 7 பேர் 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 36 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 18 ஆண்களும், 18 பெண்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் நேற்று 776 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 22 ஆயிரத்து 778 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 475 பேர் நேற்றுக் குணமடைந்துள்ளனர். (த-22)

## இரு பொலிஸ்...

பிராந்திய காரியாலயம் இவ்வாறு விளக்கம் கோரியுள்ளது.

குற்றச்சாட்டுக் குறித்து விளக்கமளிப்பதற்காக, ஆணைக்குழுவில் நாளை வெள்ளிக்கிழமை முன்னிலையாகி விளக்கமளிக்குமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

ஏழாலையில் வீடு புகுந்து தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் ஊரவர்கள் இருவரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். எனினும், பொலிஸார் அவர்களை தப்பிக்கவிட்டுள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர் தரப்பினர் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்திருந்தனர். அதனையடுத்து பொலிஸ் அலுவலர்களிடம் கோரப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடக்கு மாகாண பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் இவ்வாறு விளக்கம் கோரியுள்ளார். (த)

## கூட்டமைப்புக்...

மன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் பங்கேற்றனர்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்திய வெளியுறவுச் செயலர் ஆகியோருடன் கூட்டமைப்பு நடத்திய சந்திப்புக்களின் போது பேசப்பட்ட விடயங்கள் இந்தக் கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனிடம் கேள்வி எழுப்பினார். "ஊடகம் ஒன்றுக்கு அண்மையில் வழங்கிய நேர்காணலில், தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்திருந்தால் ஜனா (நான்) அரசியலுக்கு வந்திருக்க முடியாது என்றும், புளொட் அமைப்பு கூட்டமைப்பில் இணைக்கப்பட்டிருக்காது எனவும் தெரிவித்தது உண்மையா?" என்று கேட்டார்.

அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், "ஓம். அவ்வாறு தெரிவித்தேன்" என்று பதிலளிக்க, "விடுதலைப் புலிகள் இருந்திருந்தால் நீங்கள் இங்கே இருந்திருக்க மாட்டீர்கள்" என்று கருணாகரம் திரும்பக் கூற வார்த்தை மோதல் ஆரம்பமானது. இருவரும் சில நிமிடங்கள் வார்த்தைகளால் கடுமையாக மோதிக் கொண்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலையிட்டு கருணாகரத்தை அமைதிப்படுத்தினார். அதனையடுத்து கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சகல கருமங்களும் கைகூடி வரும் நேரத்தில் எமக்கு இவ்வாறு முரண்படுவது பொருத்தமானது அல்ல என்றார். அதனையடுத்து கூட்டமும் முடிவுக்கு வந்தது. (ஒ-5)

## ஜனாதிபதி..

பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கொட்டும் மழைக்கு மத்தியிலும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். "மாவட்டச்செயலரே!, பிரதேச செயலாளரே! கொரோனா என்று ஓடி ஒளியாமல் ஏழை விவசாயிகளின் பிரச்சினைக்குத் தீர்வு கொடு, ஆளுநரிடம் காணி பெறுவதற்கான அனுமதி கோராமல், காணி தங்களுடையது எனக் கூறும் அராஜகத்தை மத குருக்கள் நிறுத்துங்கள்," என்பன போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோவில்மோட்டை விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து, போராட்ட இடத்துக்குச் சென்ற ஜனாதிபதியின் செயலாளர் அவர்களின் பிரச்சினை தொடர்பில் கேட்டறிந்தார். "குறித்த காணி விடயத்தில் சட்டத்தின்படி வடக்கு மாகாணம் எடுத்த முடிவை நடைமுறைப்படுத்த மத்திய அரசு இடமளிக்க வேண்டும்'' என்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகள் மற்றும் விடயங்கள் கொண்ட மனு ஒன்றை ஜனாதிபதியின் செயலாளரிடம் விவசாயிகள் கையளித்தனர். (த-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னையில் கடைசி ஆட்டம்!

டுபாய், ஒக். 7
டோனியின் இறுதி ஐ.பி.எல். தொடராக இந்தத் தொடர் அமைந்துவிடுமோ என்ற வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில், சென்னையில்தான் தனது இறுதி ஆட்டம் என்றவாறாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் டோனி. இதன்மூலம் நடைபெற்றுவரும் தொடர் தனது இறுதித் தொடர் இல்லை என்றும் அவர் சொல்லாமல் சொல்லியுள்ளார். ரசிகர்களுடனான காணொலி உரையாடலொன்றில் இது தொடர்பில் டோனி மேலும் தெரிவிக்கையில், நான் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வுபெறுகிறேன் என்ற அறிவிப்பை சொல்ல சுதந்திர தினத்தைவிட சிறந்த ஒரு நாள் இருக்காது என எண்ணி அதைச் செய்தேன். அதே நேரத்தில் எனக்கான பிரிவுபசார போட்டியாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக சென்னையில் நான் விளையாடும் ஆட்டம் அமைய வாய்ப்பு உள்ளது. அதைவிட சிறந்த தொரு இறுதியாட்டம் எனக்கு இருக்க முடியாது - என்றார். (ம)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 31.03.1967 மறைவு: 07.09.2021

### திரு.தெய்வேந்திரன் ரவீந்திரன் (ரவி)

யாழ். இருபாலையைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்து Den Helder ஐ வதிவிடமாகவும் கொண்ட திரு. தெய்வேந்திரன் ரவீந்திரன் (ரவி) அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டி நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்.

என் அன்பிற்குரியவரே, என் ஆருயிரே
என் அன்பின் பொக்கிசமே
அழகாய் வாழ்ந்த எம் குருவிக்கூட்டில்
அகாலமாய் ஒரு குருவி பறந்ததேனோ?
ஆயிரம் உறவுகள் அருகில் இருந்தாலும்
ஆருயிரே உங்களுக்கிணை யாருமில்லை இவ்வுலகில்

விண்மீன்களே பிச்சைகேட்கும் உங்கள் சிரிப்பை
விண்ணுக்கே விரைந்து சென்றீர்களோ அள்ளி கொடுப்பதற்கும்
இணை பிரியா அன்றில் பறவைகளாய்
இருந்தோமே என்றும்
இணைத்தவனே எம்மைப் பிரித்துவைத்ததன்
காரணம் ஏனோ?

உடலால் பிரிந்தது உண்மைதான் என்னவோ
உயிராய் உணர்வாய் வாழ்வோம்
ஏழ் ஏழ் ஜென்மத்திலும் என்றுமே
I Miss You my sweet heart

கனிந்த பேச்சினாலும் புன்னகையினாலும்
எல்லோரையும் கவர்ந்தீர்களே அப்பா
கனத்த மனத்துடன் கண்ணீர் மல்கி
கலங்கி நிற்கின்றோம் அப்பா
சிரித்து சிரித்து அரவணைத்தீர்களே
அழுது அழுது ஆதரவற்று நிற்கின்றோம் அப்பா

அழியாத உயிர்கொண்ட
எங்கள் அன்புத் தந்தையே
ஆறாத வடுவாய் வதைபட்டு நிற்கின்றோம்
அழகு முகம் கொண்ட அப்பாவே உங்கள்
அரவணைப்பிற்காக ஏங்குகின்றோம் என்றுமே.

உங்களைப்போல ஒருவர் யாருமில்லை அப்பா
நீங்கள் தான் பிறந்து வரவேண்டும் இவ்வுலகில்
இருந்தாலும் இறந்தாலும் அழியாது அப்பா
உங்கள் பெயரும், புகழும், ஞாபகங்களும்,
தலை முறை எத்தனை கழிந்தாலும்
தவமிருந்து பெற்றிடுவோம் அப்பா உங்களை
*We Miss You Dad*

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

எங்கள் அன்புத்தந்தையின் ஆத்ம சாந்திக்காக வேண்டி நெதர்லாந்து டென்கெல்டர் ஸ்ரீ வரத ராஜ செல்வ விநாயகர் ஆலயத்தில் 10-10-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று நண்பகல் 12:00 மணியளவில் ஆத்மசாந்திப்பூசை நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**


### வீடு வாடகைக்கு

நல்லூர் செட்டித்தெரு லேனில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு விடப்படும். தொடர்பு:077 6969 511, 071 861 7928



### வாடகைக்கு

நெல்லியடி, நாவலர் மடம் சந்தியில் அமைந்துள்ள மேலே உள்ள கட்டடத்தின் கீழ்த்தளம் (1230 சதுர அடி) வர்த்தக நடவடிக்கைகளுக்காக வாடகைக்கு விடப்படும்.
**077 031 4091, 077 790 2006**

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் - காரைநகர் வீதியில், ஓட்டுமடம் சந்தியில் இருந்து 500 M தூரத்தில் 20 அடி பாதையுடன் 6 பரப்பு காணி விற்பனைக்கு இரண்டு பரப்பாக பிரித்து வழங்கப்படும். (யாழ் மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து 2 KM தூரம்)
**076 221 2037, 077 288 0152, 076 734 1023**

### வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கும் மிக குறைந்த கட்டணத்தில் பொதிகள் அனுப்பிட
**U.K - 1000/=**
திரு முருகன் கொம் நெற்
321, K.K.S. Road, Jaffna.
0777 554 528

### காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 14 அடிப் பாதையுடன். பரப்பு 6 இலட்சம் ரூபாய். பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை, தரகர் தேவையில்லை.
**077 814 7389, 077 614 7333**

### மணமகன் தேவை

1991 இல் பிறந்த யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சமீபத்தில் இலண்டன் சென்ற சதய நட்சத்திரம் 2ம் பாதம் (சூரியன் செவ்வாய்) உடன் கிரகபாவம் 14 உள்ள கணினித்துறையில் உயர் பதவி வகிக்கும் மணமகளுக்கு இலண்டனில் நிரந்தரமாக வாழ விருப்பமுள்ள தகுதியான மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: **071 4841 069**

### வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும்
**குளிர்பான நிலையத்துக்கு**
ஆண், பெண் வேலையாள்கள் தேவை.
மாதம் 4 நாள்கள் லீவு மற்றும் இருவேளை உணவுடன் 25000/= வேதனம் வழங்கப்படும்.
**P.N. 077 618 2725**

### சேவை

விசேட தேவையுடையவர்களுக்கான
விளையாட்டு உபகரணங்கள் விற்பனை
எமது நிறுவனத்தின் சேவைகளுடன் விசேடமாக பின்வரும் உற்பத்திப் பொருட்களையும் தயாரித்து வழங்க முடியும் என்பதையும் அறியத்தருகின்றோம்.
1. Bocce Ball Set 2. Tacku Volley Table Set
3. Fliying Disk Stand
STYLISH BRAND
Manly Fashion Styles & Cloths,
Others : Wood and steel Product
No. 140, Paramesvara Junction, Palaly Road, Jaffna.
தொடர்புகளுக்கு: 077 716 3482
Email : stylishbrandshowroom@gmail.com


## ரியல் மட்ரிட் அணியை வென்றது எஸ்பன்ஜோல்

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் எஸ்பன்ஜோலிடம் படுதோல்வியடைந்தது ரியல் மட்ரிட். ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் எஸ்பன்ஜோலின் சார்பாக முதலாவது கோலைப் பதிவுசெய்தார் தோமஸ். முதல் பாதியில் வேறெந்தக் கோலும் பதிவாகவில்லை. 60ஆவது நிமிடத்தில் எலிக்ஸ் விடால் எஸ்பன்ஜோலின் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார். 2:0 என்ற கோல் கணக்கில் பெரும் ஆதிக்கம் செலுத்தியது எஸ்பன்ஜோல். பென்சிமா 71ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் கோலைப் பதிவுசெய்தார். எனினும் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது எஸ்பன்ஜோல். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.